ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2185 - 2020 ජූලි මස 17 වැනි සිකුරාදා - 2020.07.17
2185 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 694 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 701 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, ஒகத்து மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, யூலை மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

691-B 82040-5,403 (2020/ 07)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடுத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## சட்ட அலுவலர் (நிறைவேற்று உத்தியோகத்தர் தரம் III) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் - 2020

## காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் நிறைவேற்று உத்தியோகத்தர் தரம் III சட்ட அலுவலர் பதவிக்கு கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு நடைமுறை.**- இவ் அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்ப தாரிகள், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடாத்தப்படுகின்ற கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்பட்டு, அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரி, நிலவும் வெற்றிடத்துக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார். இதன்போது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (இலக்கம் 06 இல் குறிப்பிடப்பட்டுள்ளது) புள்ளி வழங்கல் நடைமுறையின் பிரகாரம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

நியமனத் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

2. **ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்குத் தேவையான தகைமைகள் :**

(i) கல்வி/தொழில்சார் தகைமைகள்
உச்ச நீதிமன்ற சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

(ii) அனுபவம்

உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமானம் செய்த பின்னர் மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத செயலூக்கமுள்ள தொழில் அனுபவத்தைக் கொண்டிருத்தல். (செயலூக்க தொழில் அனுபவத்தினை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கின்ற ஆவணங்களில் அனுபவம் பெற்றுக் கொண்ட காலம், திகதி மற்றும் பதவி முத்திரை என்பவை தெளிவாக குறிப்பிடப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)

அல்லது

உச்ச நீதிமன்றில் சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமானம் செய்த பின்னர் அரசாங்க நிறுவனமொன்றில் சட்டத்துறையில் மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத காலப்பகுதிக்கு. பின்வரும் பணிகளுடன் தொடர்புடைய அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

(அ) வழக்குகள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் மற்றும் சட்ட மா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்பு பணிகளில் ஈடுபடல்;
(ஆ) ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய சட்ட நடவடிக்கைகள்;
(இ) ஏற்புடைய கட்டளைகள் மற்றும் சட்டவிதிகள் தொடர்பிலான சட்ட நடவடிக்கைகள்;
(ஈ) சட்ட வரைவுகள், சுற்றறிக்கைகள், ஒழுங்குவிதிகள் போன்ற சட்ட ரீதியான ஆவணங்களைத் தயாரிக்கும் நடவடிக்கைகள்;
(உ) பல்வேறு நியதிச்சட்ட நிறுவனங்களினால் நடாத்தப்படும் சட்ட மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் விசாரணை நடவடிக்கைகள்.

(இவ் விடயங்கள் செயலாளர், திணைக்களத் தலைவரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் மூலம் மற்றும் ஆவணம் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

(iii) **உடல், உள ரீதியான தகைமை.**-

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் இப்பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல், உள தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) **பிற தகைமைகள்.**-

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
- விண்ணப்பதாரிகள் சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்;
- விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற கடைசித் திகதிக்கு இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்**.-

(i) இப் பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். தாங்கள் ஓய்வூதிய திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான முடிவுகளுக்கு உட்படுத்தப்படுவர். விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது விதிக்கப்படும் வகையில் பங்களிப்பு தொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) இப்பதவி 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று (03) வருட காலப்பகுதிக்குள் ஆட்சேர்ப்பு நடைமுறையிலுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

(iii) 2014.01.21ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையினதும் அத்துடன் இணைந்த சுற்றறிக்கைகளினதும் பிரகாரம் இப் பதவிக்கு நியமனம் பெற்று ஐந்து (05) வருட காலம் கழிக்க முன்னர் சேவையில் இணைந்த மொழிக்கு மேலதிகமாக பிற அரசகரும மொழி மூலம் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் அரசகரும மொழி அல்லாத மொழிமூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்கள், தகுதிகாண் காலத்திற்குள் உரிய அரசகரும மொழியில் தேர்ச்சியை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கை முறையினதும், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையினதும், அரசாங்க நிதி ஒழுங்குவிதிகளினதும், திணைக்கள ஏனைய கட்டளைகளினதும் ஏற்பாடுகளுக்கு கட்டுப்பட்டதாகும்.

4. **வயது எல்லை**.- விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

5. **இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம்**.- இப்பதவிக்கு ரூபா 47,615 - 10 × 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - ரூபா 110,895.00 ஆன (மாதாந்த) சம்பளம் உரித்துடையதாகும். (2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் SLI-2016 சம்பளத்தொகுதியாகும். குறித்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அதில் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பளம் செலுத்தப்படும்.)

6. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது கீழ்க்காணும் புள்ளி வழங்கும் நடைமுறை அடிப்படையாகக் கொள்ளப்படும்.

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | 25 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் பெற்றுக்கொண்ட சட்ட துறையுடன் தொடர்புடைய பட்டப் பின் படிப்பு டிப்ளோமா | 25 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற குறித்த துறை தொடர்பான பட்டப்பின் படிப்பு டிப்லோமா அல்லது சட்டமாணிப் பின் படிப்பு டிப்ளோமா (ஒரு வருடத்திற்குக் குறையாத) | 20 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் பெற்றுக்கொண்ட சட்டத் துறையுடன் தொடர்புடைய சட்ட துறை தொடர்பான பட்டம் | | |
| | • முதலாம் வகுப்பு சித்தி | 15 | |
| | • இரண்டாம் வகுப்பு மேல் நிலை சித்தி | 10 | |
| | • இரண்டாம் வகுப்பு கீழ் நிலை சித்தி | 07 | |
| | • சாதாரண சட்டமாணிப்பட்டம் | 05 | |
| | சட்டக் கல்லூரி இறுதியாண்டு முதலாம் வகுப்பு சித்தி | 10 | |
| | சட்டக் கல்லூரி இறுதியாண்டு இரண்டாம் வகுப்பு சித்தி | 05 | |
| | **குறிப்பு**: சிறப்பு தேர்ச்சி சகிதம் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பின் மட்டும் 05 புள்ளிகள் வழங்கப்படுதல் வேண்டும். (ஆகக்கூடிய தகைமைக்கு மட்டும் புள்ளி வழங்கப்படும்) | | |

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 02 | **மேலதிக தொழில் அனுபவம்**<br>(i) மேலதிக தொழில்சார் தகைமைகள்<br>அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற சட்டத்துறை தொடர்பான ஒரு வருடத்திற்கு மேலான டிப்ளோமா பாடநெறி யொன்றிற்காக (டிப்ளோமா பாடநெறியொன்றிற்கு 10 புள்ளிகள் வீதம்)<br>அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற சட்டத்துறை தொடர்பான 06 மாதங்களுக்குக் கூடியதும் ஒரு வருடத்திற்கு குறைந்ததுமான காலப்பகுதி டிப்ளோமா பாடநெறியொன்றுக்காக (டிப்ளோமா பாடநெறியொன்றுக்கு 05 புள்ளிகள் வீதம்)<br>அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற சட்டத்துறை தொடர்பான 03 மாதங்களுக்குக் கூடியதும் 06 மாதங்களுக்கு குறைந்ததுமான சான்றிதழ் பாடநெறியொன்றுக்காக (பாடநெறியொன்றுக்கு 03 புள்ளிகள் வீதம்)<br>(இலக்கம் 01 இன் கீழ் புள்ளி வழங்கிய சாற்றிதழ் தவிர்ந்த ஏனையவை) | 10 | 35 |
| | (ii) மேலதிக அனுபவம்<br>(iii) (விண்ணப்பத்தில் கோரப்படும் அறிவித்தலில் 2. (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுபவம்<br>(அடிப்படைத் தகைமையை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான 03 வருட சேவைக் காலம் நீங்கலாக)<br>- வருடமொன்றுக்கு 05 புள்ளிகள் வீதம் ஆகக்கூடியது 25 புள்ளிகள்<br>- 06 மாதங்களுக்குக் கூடியதும் ஒரு வருடத்திற்கு குறைந்ததுமான காலப்பகுதி : 02 புள்ளிகள்<br>* 15 வருடங்களுக்குக் குறையாத சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த (இந்த சேவைக் காலம், விண்ணப்பதாரி சார்பாக வழங்கும் சான்றிதழில் குறிப்பிடப்படல் வேண்டும்.) சட்டத்தரணியொருவரிடமிருந்து அல்லது சனாதிபதி சட்டத்தரணியொருவரிடமிருந்து அல்லது நீதிவான் சட்டத்தரணியொருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழொன்றின் மூலம் மேலதிக அனுபவம் நிரூபிக்கப்படல் வேண்டும்.<br>* மேற்குறித்த தகைமையை பூர்த்தி செய்த அரசாங்க அலுவலரின் அல்லது தனிப்பட்ட பிரிவின் அலுவலரின் நிறுவனத் தலைவரினால் மேலதிக அனுபவம் நிரூபிக்கும்போது விண்ணப்பதாரி சட்டரீதியான பதவியொன்றில் பணியாற்றுவதாக சேவை சான்றிதழொன்று/சான்றிதழ்கள் மூலம் நிரூபிக்கப்படல் வேண்டும். | 25 | |
| 03 | **தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவு**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொண்ட பட்டப் படிப்பிற்காக தகவல் தொழில்நுட்பப் பாடத்தை பிரதான பாடமாக பின்பற்றியிருத்தல்.<br>அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 01 வருடத்திற்குக் குறையாத அல்லது 1500 மணித்தியாலங்களைக் கொண்ட தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறியொன்றைப் பின்பற்றியிருத்தல்.<br>அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தகவல் தொழில்நுட்பச் சான்றிதழ் பாடநெறியொன்றைப் பின்பற்றியிருத்தல்<br>- 06 மாதங்கள் /720 மணித்தியாலங்கள்<br>- 03 மாதங்கள் /360 மணித்தியாலங்கள்<br>(ஆகக்கூடிய தகைமைக்கு மட்டும் புள்ளி வழங்கப்படும்) | 10<br>07<br>05<br>03 | 10 |

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 04 | **மொழியாற்றல்** | | 15 |
| | ஆங்கில மொழியில் பின்பற்றப்பட்ட பட்டப்பின் படிப்பு/பட்டம்/சட்ட முதுமாணிப் பட்டம்/முதுமாணிப் பட்டம் | 15 | |
| | (குறித்த பரீட்சை வினாத்தாள்கள் அனைத்திற்கும் ஆங்கில மொழியில் விடை அளித்திருத்தல் வேண்டும்) | | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில மொழி தொடர்பான டிப்ளோமா பாடநெறியொன்றைப் பின்பற்றியிருத்தல். | 10 | |
| | (01 வருடம் அல்லது 1,500 மணித்தியாலங்கள்) | | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில மொழி தொடர்பான சான்றிதழ் பாடநெறியொன்றைப் பின்பற்றியிருத்தல். | | |
| | - 06 மாதங்கள் /720 மணித்தியாலங்கள் | 07 | |
| | - 03 மாதங்கள் /360 மணித்தியாலங்கள் | 05 | |
| | (ஆகக்கூடிய தகைமைக்கு மட்டும் புள்ளி வழங்கப்படும்) | | |
| 05 | **நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை** | | 15 |
| | (i) பொது அறிவு மற்றும் அறிவுத்திறன் | 05 | |
| | (ii) சட்டத்துறையின் நவீன போக்குகள் பற்றிய அறிவு | 05 | |
| | (iii) தெளிவாக கருத்து தெரிவிக்கும் ஆற்றல் மற்றும் ஆளுமை | 05 | |
| | மொத்தம் | | 100 |

**குறிப்பு**.- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்கப்படுகின்ற சான்றிதழ்களில் தொடர்புடைய கால எல்லைகள் தொடர்பாக குறிப்பிடப்படாத பட்சத்தில், அவ்வாறான சான்றிதழ்களுக்கு குறித்த காலப்பகுதிகளை தொடர்புடைய நிறுவனத்தினால் எழுத்துமூலம் உறுதிப்படுத்தப்பட்டு சமர்ப்பிப்பது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். அவ்வாறு கால எல்லை குறிப்பிடப்படாத அல்லது கால எல்லை உறுதிப்படுத்தப்படாத சான்றிதழுக்கு புள்ளி வழங்குவது தொடர்பாக கவனிக்கப்படமாட்டாது.

7. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்**.- சகல விதத்திலும் பூர்த்தியான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருக்கும் விண்ணப்பதாரிகள் மட்டுமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின்போது எல்லாச் சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகளையும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற்படப்பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் அடையாள அட்டைகள் ஏற்றுக்கொள்ளப்படும்:

(i) ஆட்பதிவு செய்யும் ஆணையாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய அடையாள அட்டை
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு

8. **விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் முறை**.-

(i) விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை 2020.08.17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்,
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு,
மிஹிகத்த மெதுர, காணிச் செயலகம்,
இல. 1200/6, இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.

(ii) இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை A4 அளவிலான கடதாசியின் மூன்று பக்கங்களையும் பாவித்து முதலாவது பக்கத்தில் 1.1 தொடக்கம் 3.1 வரையும், இரண்டாம் பக்கத்தில் 3.2 தொடக்கம் 4.7 வரையும் மூன்றாம் பக்கத்தில் 5 தொடக்கம் 8 வரையும் வருமாறு தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “சட்ட அலுவலர் பதவி III ஆம் தரம் பதவிக்கான ஆட்சேர்ப்பு” எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர் / சமாதான நீதவான் / சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ பகிரங்க நொத்தாரிசு / முப்படையைச் சேர்ந்த ஆணைபெற்ற உத்தியோகத்தர் அல்லது ரூபா 47,615.00 ஐ அல்லது இதற்கு மேலதிக மாதாந்த திரட்டிய சம்பளத்தைப் பெறும் அரசாங்கத்தில் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகியோருள் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(v) ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவரினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

(vi) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் மற்றும் தாமதமடைதல் தொடர்பில் எந்தவொரு முறைப்பாடுகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

9. **பொய்யான தகவல்களைச் சமர்ப்பித்தல்.-** நீங்கள் பூர்த்தி செய்து அனுப்பும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானதென அல்லது பிழையானதென ஆட்சேர்ப்புக்கு முன்னர் தெரியவரும் பட்சத்தில் உங்களது விண்ணப்பம் நிராகிக்கப்படும். வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதென அல்லது பிழையானதென ஆட்சேர்ப்பின் பின்னர் தெரிய வரும் பட்சத்தில் அதற்குரிய நடவடிக்கைகளுக்கு கட்டுப்பட்டு சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வெற்றிடங்களை நிரப்பும் அல்லது நிரப்பாமல் இருக்கும் உரிமை அரசாங்க சேவை ஆணக்குழுவிற்கு உரியது.

11. இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஏதும் ஒவ்வாமை ஏற்படுமிடத்து சிங்கள மொழியே மேலோங்கி நிற்கும்.

12. இவ் அறிவித்தலில் உள்ளடங்காத தகவல்கள் அல்லது இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் ஏதேனும் ஒரு பிரச்சினையொன்று எழுந்தால் அது தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்ப்பே இறுதியாகும்.

அரசாங்க சேவைகள் ஆணக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு.

2020, யூலை 13.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு**

சட்ட அலுவலர் (நிறைவேற்று உத்தியோகத்தர் தரம் III) பதவிக்கான விண்ணப்பம்

(அலுவலக உபயோகத்துக்கு மட்டும்)

(ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்)

சிங்களம் - 2/தமிழ் - 3/ஆங்கிலம் - 4

குறிப்பு : தோற்றும் மொழி மூலம் மாற்றம் செய்ய முடியாது.

1.0 1.1 முழுப்பெயர் (Mr./ Mrs./ Miss) :..........................................................................................................................
(சிங்களத்தில்/தமிழில்)

1.2 முழுப் பெயர் :................................................................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் : (Mr./ Mrs./ Miss) ..............................................................................................
(சிங்களத்தில்/தமிழில்)

1.4 முதலெழுத்துக்களுடன் பெயர் : ...............................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2.0 2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :

................................................................................................................................

2.2 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :

................................................................................................................................

2.3 தொலைபேசி இலக்கம் :

................................................................................................................................

3.0 3.1 பால் நிலை : பெண் - 1, ஆண் - 0 ☐
(ஏற்புடைய கூட்டில் குறிப்பிடவும்)

3.2 திருமணமானவரா/திருமணமாகாதவரா என்பது : திருமணமானவர் - 1
திருமணமாகாதவர் - 2 ☐
(ஏற்புடைய கூட்டில் குறிப்பிடவும்)

3.3 பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.4 2020.08.17 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.5 தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

4.0 4.1 நேர்முகப் பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்கு விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலுக்கமைய பெற்றுக்கொண்டுள்ள தகைமைகள் தொடர்பான விபரங்கள் :

| தகைமை பெற்றுக்கொண்ட நிறுவனம் | பெற்ற திகதி |
|---|---|
| ........................................................ | ................................ |
| ........................................................ | ................................ |

உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராக சத்தியப் பிரமாணம் செய்த திகதி :........................

4.2 விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் இல. 06 இன் கீழான ஒவ்வொரு தகைமைகளையும் பெற்றுக்கொள்வதற்குரிய விபரங்கள் :

4.3 மேலதிக கல்வித் தகைமைகள் :........................................................................................................
................................................................................................................................

4.4 மேலதிக தொழில்சார் தகைமைகள் :................................................................................................
................................................................................................................................

4.5 மேலதிக தொழில் அனுபவம் :........................................................................................................
................................................................................................................................

4.6 மொழியாற்றல் :..........................................................................................................................
.........................................................................................................................................................

4.7 தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவு :...................................................................................................
.........................................................................................................................................................

5.0 நீங்கள் ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா?
.........................................................................................................................................................

(உரிய கூட்டில் (✓) என இடவும்) (ஆம் எனில் விபரங்களை தருக.)

| ஆம் | இல்லை |
|---|---|

.........................................................................................................................................................

6.0 இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் உண்மையானதும் சரியானதுமென உறுதியுரைக்கின்றேன். இவ் விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள தகவல்களில் ஏதும் பெய்யானதென நான் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுவதற்கு முன் தெரியவரும் பட்சத்தில் இப்பதவிக்கு நியமிக்கப்படுவதற்குத் தகுதியற்றவனாவேன் என்பதையும் இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரிய வரும் பட்சத்தில் பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கு அறிவேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

............................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :.......................

7.0 **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-**
இவ் விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................. அவர்களை தனிப்பட்ட முறையில் நான் நன்கறிவேன் எனவும் அவர் தமது கையொப்பத்தினை எனது முன்னிலையில் இட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

............................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :.......................

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :...............................
பதவி :.................................
திகதி :....................................
பதவி முத்திரை :...................................

8.0 **அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கான திணைக்களத் தலைவரின் சான்றுரை :-**
திரு./திருமதி/செல்வி ................................. அவர்கள் இந்த நிறுவனத்தில் கடமையாற்றுகின்றார் என்பதையும், அவரினால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்பதையும், அவரது சேவை மற்றும் வரவு திருப்திகரமானதாக இருந்ததுடன் அவருக்கு எதிராக எந்தவித குற்றச்சாட்டுக்களும் இல்லை என்பதையும், இப்பதவிக்கு தெரிவு செய்யப்படும் பட்சத்தில் இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் அறியத்தருகின்றேன்.

............................
திணைக்கள/நிறுவனத் தலைவரின்
கையொப்பம்.

சான்றுப்படுத்துபவரின் முழுப்பெயர் :...............................
பதவி :.................................
முகவரி :....................................
திகதி :.......................
(பதவி முத்திரையை இடவும்)

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க மொழி பெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு I இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2019 (2020)

1.0 மொழி பெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு I இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தகுதியுடைய பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 இந்த அறிவித்தலில் "சேவை" என்ற சொல் இணைந்த சேவையின் மொழி பெயர்ப்பாளர் சேவையைக் குறிக்கும்.

1.2 இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நவெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும். பரீட்சையை பிற்போடும் அல்லது இரத்துச் செய்யும் உரிமையை இணைந்த சேவை பணிப்பாளர் கொண்டுள்ளார். பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் நியமனம் வழங்கப்படுபவர்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் ஒரு தொகை வெற்றிடங்களை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் இருப்பதற்கான அதிகாரத்தை நியமன அதிகாரி கொண்டுள்ளார். தேசிய தேவைப்பாடுகளின் அடிப்படையில் ஒவ்வொரு மொழிமூலத்திலும் நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கை நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும்.

2.0 பின்வரும் மொழிப் பிரிவுகளுக்கு ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும் :

(i) சிங்களம்/தமிழ் - தமிழ்/சிங்களம்
(ii) சிங்களம்/ஆங்கிலம் - ஆங்கிலம்/சிங்களம்
(iii) தமிழ்/ஆங்கிலம் - ஆங்கிலம்/தமிழ்

3.0 **சம்பளம்.**- 2016.02.25 ஆந் திகதிய 3/ 2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக்கு இணங்க, மொழி பெயர்ப்பாளர்கள் சேவையின் I ஆம் வகுப்பிற்கான சம்பளக் குறியீட்டு இலக்கம் MN 6-2016 ஆகும் என்பதுடன் மொழி பெயர்ப்பாளர் சேவையின் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 43,940.00 -10×755 - 15 × 930 - ரூபா 65,440.00 ஆகும். முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல், 4 ஆவது சம்பளப் படிமுறைக்கு முன்னர் சித்தியடைதல் வேண்டும்.

4.0 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். இப்பரீட்சையின் மூலம் அரசாங்க மொழி பெயர்ப்பாளர் சேவையின் I ஆம் வகுப்பிற்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்களுக்கு உரித்துடைய ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு உத்தியோகத்தர் கட்டுப்பட வேண்டும்.

5.0 **சேவை நிபந்தனை.**-

(i) அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1994.07.26 ஆந் திகதிய 829/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட மொழி பெயர்ப்பாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சேவை நிபந்தனைகளும், அந்த சேவைப் பிரமாணக் குறிப்பில் செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பிறகு செய்யப்படும் திருத்தங்களுக்கும் உட்பட்ட வகையில் தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் மொழி பெயர்ப்பாளர் சேவையின் I ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

(ii) முதல் நியமனம் வழங்கப்படும் சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது 03 வருடங்கள் சேவையாற்றுவது அவசியமாகும். எவ்வாறிருந்தபோதிலும் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் விசேட காரணங்களினால் அக்காலம் நிறைவு பெறுவதற்கு முன்னர் எவரேனும் ஒரு அலுவலரை இடமாற்றம் செய்வதற்கு தேவையேற்படின், நியமன அதிகாரிக்கு அதற்கான அதிகாரம் உள்ளது.

(iii) 01/ 2014 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு இணங்கவும் அதன் இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளுக்கு இணங்கவும் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 05 வருடங்களுக்குள் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற வேண்டும்.

6.0 **தகைமைகள்**.- அரசாங்க மொழி பெயர்ப்பாளர் சேவையின் I ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்பதற்கு பின்வரும் தகைமைகள் ஏற்புடையதாகும்.

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) சிறந்த நன்னடத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும் ;

(இ) நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உளத் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்;

(ஈ) கல்வித் தகைமைகள் :

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது அதற்குச் சமனான ஒரு பரீட்சையில் உரிய மொழி பெயர்ப்பு மொழிமூலங்கள் இரண்டிலும் சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது அதற்குச் சமனான தகைமையொன்றைப் பெற்றிருத்தல் ;

அத்துடன்

(ii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் ;

(உ) வயது : விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 21 வயதுக்கு குறையாதவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதற்கிணங்க 1999.08.24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1980.08.24 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்த திகதியைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரமே இதற்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்களாவர்).

**குறிப்பு** - 1. அரசாங்க சேவையில் மற்றும் மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு மேற்படி வயதெல்லை ஏற்புடையதாகாது.

2. மேற்படி பட்டச் சான்றிதழ் மற்றும் வேறு சான்றிதழ்கள், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னரான ஒரு திகதியில் வலுப்பெறுவதாக இருத்தல் வேண்டும்.

3. தமது பட்டத்தில் சிங்களம் அல்லது தமிழ் ஆங்கிலம் ஆகிய மொழிப் பாடங்களில் 2 இல் சித்தியடைந்திருப்பின், அவ்வாறு அத்தகைய தகுதியைக் கொண்டுள்ள ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் உரிய சம்பளத் திட்டத்தில் ஆரம்ப சம்பளத்தை விட இரண்டு சம்பளப் படிமுறைகள் மேலாக வைக்கப்படுவார்.

7.0 **பரீட்சைக் கட்டணங்கள்**.- பரீட்சைக்கான கட்டணம் 600.00 ரூபா ஆகும். இத்தொகையை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்கும் விதத்தில் ஏதேனுமொரு மாவட்ட/ பிரதேச செயலகத்தில் செலுத்தி, விண்ணப்பதாரின் பெயரில் பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டில் கழறாதவாறு அதன் ஓரத்தை ஒட்ட வேண்டும். இக்கட்டணம் மீளச் செலத்தப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை கைவசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமைய முடியும்.

8.0 **விண்ணப்பிக்கும் முறை**.-

(அ) விண்ணப்பங்கள் இந்த அறிவித்தலுடன் தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு இணங்கிய முறையில் காணப்பட வேண்டும் என்பதுடன் அதனை கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி ஏ4 அளவிலான கடதாசிகளில் தயாரித்து பரீட்சார்த்தியினாலேயே நிரப்பப்பட வேண்டும். 1.0 முதல் 5.0 வரையான பந்திகள் தாளின் முதல் பக்கத்திலும், 6.0 முதல் எஞ்சியுள்ள பந்தகிள் மற்றைய பக்கங்களிலும் அமையும் விதத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்பதை விசேடமாக கவனத்திற் கொள்ளவும். விண்ணப்பத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் மொழியில் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபரொருவரினால், சமாதான நீதவானொருவரினால், சத்தியப் பிரமாண ஆணையாளரொருவரினால், சட்டத்தரணியொருவரினால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால், முப்படைகளின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவிநிலை தரத்திலுள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) பரீட்சைக்காகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் 2020, ஓகத்து மாதம் 24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக, "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பமும் பொறுப்பேற்கப்படமாட்டாது. விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அரசாங்க மொழி பெயர்ப்பாளர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019 (2020)" என்று தெளிவாக எழுதுதல் வேண்டும்.

(உ) ஏற்கனவே அரசாங்க திணைக்களங்களில் சேவையிலுள்ள பரீட்சார்த்திகள் தாங்கள் பணிபுரியும் திணைக்களத் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். எவரேனும் ஒரு விண்ணப்பதாரி அவ்வாறு செய்யத் தவறுவாராயின் அவர் தகுதியற்றவராகக் கருதப்படுவார். 2020, ஓகத்து மாதம் 24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு கிடைக்கச் செய்யக்கூடிய விதத்தில் போதிய கால அவகாசத்துடன் திணைக்கள தலைவர்கள் விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு விண்ணப்பதாரிகள் ஊடாக கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஊ) எல்லா விதத்திலும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல்கள் எதுவுமின்றி நிராகரிக்கப்படலாம். தபாலில் அனுப்பும் போது விண்ணப்பங்கள் தொலைந்தமை அல்லது தாமதமடைந்தமை தொடர்பில் செய்யப்படும் எந்தவொரு முறைப்பாடும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

(எ) அனைத்து விண்ணப்பதாரர்களும் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்ய முன்னர் வர்த்தமானி அறிவித்தலை நன்றாக வாசித்து விளங்கிக் கொள்ளுதல் அவசியமாகும். உரிய குறியீடுகளைச் சரியாகக் குறிப்பிட வேண்டும் என்பதுடன், தாமதம் மற்றும் பிழைகளைத் திருத்துவதற்கு முன்வைக்கப்படும் எந்தவொரு கோரிக்கையும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தினதும் பணம் செலுத்தப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினதும் நிழற்படப்பிரதியொன்றை தம் கைவசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது. இங்கு தரப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர் மாத்திரமே விண்ணப்பிப்பார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் விண்ணப்பங்களை அனுப்பியுள்ள அனைத்து ஆட்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரங்கள் அனுப்பப்படும். அனுமதிப்பத்திரங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அவ் அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெறாவிட்டால், அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், உமது முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம், என்பவற்றைக் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரிக்குமாறு அறியத்தருவதுடன், நீங்கள் கொழும்புக்கு வெளியிலுள்ள ஒரு விண்ணப்பதாரராயின், உமது அந்த விபரங்களுடன் பெக்ஸ் மூலம் அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றை உமக்கு அனுப்புவதற்காக உமது ஃபெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஃபெக்ஸ் இலக்கத்துக்கு அனுப்பிவிட்டு விசாரிப்பது பொருத்தமானதாகும். அவ்வாறு விசாரிக்கும் போது தேவைான போது சமர்ப்பிப்பதற்காக உமது கைவசம் வைத்துள்ள விண்ணப்பத்தின் பிரதியையும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியையும் விண்ணப்பத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்த பற்றுச்சீட்டையும் தயார்படுத்தி வைத்துக்கொள்வது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

9. **பரீட்சைக்கு அனுமதி**.-

(அ) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தியொருவர் தனது அனுமதிப்பத்திரத்தை பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது.

(ஆ) பரீட்சார்த்திகள் தமக்கு என ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் உரிய பரீட்சை மண்டபத்துக்கு, உரிய அனுமதிப்பத்திரத்தில் தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டு முதலாவதாக அம்மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றும் தினத்தில், பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்பற்ற வேண்டிய சட்டதிட்டங்கள் இந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**குறிப்பு**.- விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்குவதை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவர் என்று ஏற்றுக்கொண்டதாகக் கருதக் கூடாது.

10.0 **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையும் விதத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காகப் பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும் பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிப்படத்தக் கூடியவாறு முகத்தையும் இருகாதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்தில் நுழைதல் வேண்டும். மேலும் அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரையில் பரீட்சை அதிகாரிகளால் விண்ணப்பதாரியை அடையாளம் காணக்கூடிய விதத்தில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும். ஏதேனும் ஒரு விதத்தில் ஆட்சேபனை தெரிவித்தால் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படும். எவ்வாறாயினும், ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியாது என்பதனால் அத்தகைய பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் வெளியிடப்படமாட்டா.

11.0 **பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனைகள்** .- பரீட்சார்த்தியொருவருக்கு தகைமைகள் இல்லை என்று தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலத்தில் அல்லது பரீட்சையின் பின்னர் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் அவருடைய பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்பட முடியும். பரீட்சார்த்தியொருவர் ஏதேனும் ஒரு விடயத்தை அது பொய்யானது என்று அறிந்த நிலையிலேயே சமர்ப்பித்திருப்பதாகத் தெரிய வருமிடத்து, அல்லது ஏதேனும் ஒரு முக்கியமான விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருப்பாராயின் அவரை அரசாங்க சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12.0 **பரீட்சை முறை** .- எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை என இரண்டு பகுதிகளைக் கொண்டது.

12.1 எழுத்துப் பரீட்சை பின்வரும் விடயங்கள் தொடர்பான வினாக்களைக் கொண்டிருக்கும்.

(1) மொழிபெயர்ப்பு - 100 புள்ளிகள் 03 மணித்தியால வினாப்பத்திரமொன்று,
(2) ஆங்கில மொழி - 100 புள்ளிகள் 01 மணித்தியாலமும் 30 நிமிடங்கள் கொண்ட வினாப்பத்திரமொன்று,
(3) சிங்கள மொழி - 100 புள்ளிகள் 01 மணித்தியாலமும் 30 நிமிடங்கள் கொண்ட வினாப்பத்திரமொன்று,
(4) தமிழ் மொழி - 100 புள்ளிகள் 01 மணித்தியாலமும் 30 நிமிடங்கள் கொண்ட வினாப்பத்திரமொன்று,
(5) கிரகித்தல் - 100 புள்ளிகள் 01 மணித்தியாலமும் 30 நிமிடங்கள் கொண்ட வினாப்பத்திரமொன்று.

12.1.1 பாடத்திட்டம்.-

(1) மொழிபெயர்ப்பு - அலுவலக ஆவணமொன்று அல்லது அறிக்கையொன்றிலிருந்து அல்லது பத்திரிகை ஆக்கமொன்றிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதி அடங்கலாக அலுவலக, விஞ்ஞான, சட்ட மற்றும் தொழில்நுட்ப ஆக்கங்களிலிருந்து பாரம்பரிய இலக்கிய நூல்களிலிருந்தும் எடுக்கப்பட்ட சில கடினமான பகுதிகளை பின்வரும் முறைகளில் அதாவது, (i) அல்லது (ii) அல்லது (iii) என்பவற்றில் ஒரு முறையில் மொழிபெயர்த்தல்.

(i) சிங்களத்திலிருந்து தமிழுக்கு மற்றும் தமிழிலிருந்து சிங்களத்திற்கு
(ii) சிங்களத்திலிருந்து ஆங்கிலத்துக்கு மற்றும் ஆங்கிலத்திலிருந்து சிங்களத்திற்கு
(iii) தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கு மற்றும் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு
(மொழிபெயர்ப்பில் மிகவும் உயர்ந்த தேர்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது)

**குறிப்பு**.- ஆங்கில/சிங்கள/தமிழ் மொழி வினாப்பத்திரம் - இதற்காக மூன்ற மொழிகளிலும் வினாப்பத்திரம் தயாரிக்கப்படுவதுடன், தமது மொழிபெயர்ப்பு மொழி மூலங்கள் இரண்டிற்கும் இணங்க பொருத்தமான முறையில் இரண்டு மொழிகளிலான வினாப்பத்திரங்களுக்கு பரீட்சார்த்திகள் தோற்றுதல் வேண்டும்.

(2) ஆங்கில மொழி - கட்டுரை எழுதல், சுருக்கம் எழுதல், தரப்பட்ட ஒரு பந்தியை சுருக்கி தமது மொழிநடையில் எழுதுதல், சொற்களின் கருத்து விளங்கும் விதத்தில் வாக்கியம் அமைத்தல், வாக்கியங்களின் இலக்கணங்களை திருத்துதல், மரபுத் தொடர்களை விளக்குதல்.

(3) சிங்கள மொழி - கட்டுரை எழுதல், சுருக்கம் எழுதல், தரப்பட்ட ஒரு பந்தியை சுருக்கி தமது மொழிநடையில் எழுதுதல், சொற்களின் கருத்து விளங்கும் விதத்தில் வாக்கியம் அமைத்தல், வாக்கியங்களின் இலக்கணங்களை திருத்துதல், மரபுத் தொடர்களை விளக்குதல்.

(4) தமிழ் மொழி - கட்டுரை எழுதல், சுருக்கம் எழுதல், தரப்பட்ட ஒரு பந்தியை சுருக்கி தமது மொழிநடையில் எழுதுதல், சொற்களின் கருத்து விளங்கும் விதத்தில் வாக்கியம் அமைத்தல், வாக்கியங்களின் இலக்கணங்களை திருத்துதல், மரபுத் தொடர்களை விளக்குதல்.

(5) கிரகித்தல் - சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்படும் கிரகித்தல் வினாப்பத்திரத்திற்கு தாம் விரும்பும் ஒரு மொழியில் பதிலளிப்பதற்கு பரீட்சார்த்திகளுக்கு வாய்ப்பளிக்கப்படும்.

இதில் பல உரைகள் பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படும். சில உரைகள் தொடர்பில் பரீட்சார்த்திகளுக்கு பதில் கூற்றுக்கள் பல வழங்கப்படுவதுடன், அவற்றில் ஒன்று அந்த உரைப் பகுதியிலுள்ள விடயங்களுக்கு மிகவும் பொருத்தமானதாக இருக்கும். பரீட்சார்த்தி மிகவும் பொருத்தமான கூற்றைத் தெரிவு செய்தல் வேண்டும். ஏனைய உரைப் பகுதிகள் பரீட்சார்த்திகள் அவ் உரைப் பகுதிகளை விளங்கிக் கொள்ளும் அளவைப் பரிசோதிக்கும் விதத்தில் தயாரிக்கப்படும்.

**குறிப்பு**.- தெளிவற்ற கையெழுத்துக்களுக்கும் எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும். வாசிக்க முடியாத கையெழுத்துக்களைக் கொண்ட விண்ணப்பதாரிகளின் தகைமை இரத்துச் செய்யப்படலாம்.

12.1.2 ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக் குறைந்தது 40 புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளில் அவர்கள் பெறும் புள்ளிகளின் திறமை ஒழுங்கின் அடிப்படையில் நிலவும் வெற்றிடங்களுக்கு இணங்க நியமனங்கள் வழங்கப்படும்.

12.2 **நேர்முகப் பரீட்சை**.- தகைமைகள், சான்றிதழ் மற்றும் உரிய ஆரோக்கியம் என்பவற்றை பரிசோதிப்பதற்காக மாத்திரமே நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். இதற்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டா.

13.0 **பரீட்சையின் பெறுபேறுகள்**.- வர்த்தமானி அறிவித்தலின் 12.1.2 ஆம் பந்திக்கு இணங்க தகைமைகளைப் பூர்த்தி செய்யும் பரீட்சார்த்திகளின் திறமை ஒழுங்கின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுபேற்றுப் பட்டியல் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேறுகளை வழங்குதல் அல்லது www.results.exams.gov.lk என்ற இணைய தளத்தில் வெளியிடுதல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும்.

14.0 பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அந்தச் சட்டதிட்டங்களை மீறினால் அவர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்பட வேண்டி ஏற்படும்.

15.0 இந்தப் பரீட்சை அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளியிடப்படுவதுடன் அந்த மொழிகளின் சொற்களுக்கு இடையில் ஏதேனும் இணக்கப்பாடின்மை ஏற்படுமாயின் சிங்கள மொழிப் பிரயோகம் பயன்வலுப் பெறும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும், இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இந்த வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சைச் சட்டத்திட்டங்களுக்கு இணங்கச் செயற்படுவதற்கான கடப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

எஸ். ஆலோக்கபண்டார,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் மாகாண
சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2020, யூலை மாதம் 03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு I இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019 (2020)**

**Open Competitive Examination For Recruitment To Class I of the Government Translators' Service - 2019 (2020)**

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1.0 மொழிபெயர்ப்பாளர் சேவையின் எந்தப் பதவிக்கு நீர் போட்டியிடுகிறீர் என்பதை இங்கு கீழே குறிப்பிடுக.

(i) சிங்கள/தமிழ் மொழிபெயர்ப்பாளர் 1
(ii) சிங்கள/ஆங்கில மொழிபெயர்ப்பாளர் 2
(iii) தமிழ்/ஆங்கில மொழிபெயர்ப்பாளர் 3 (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

2.0 பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம்/தமிழ் - 2
சிங்களம்/ஆங்கிலம் - 3
தமிழ் /ஆங்கிலம் - 4 (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

3.0 3.1 முழுப்பெயர் :......................................................................................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்)
3.2 முழுப் பெயர் :......................................................................................................................................
(சிங்களத்தில்/தமிழில்)
3.3 முதலெழுத்துக்களுடன் பெயர் :..........................................................................................................
(சிங்களத்தில்/தமிழில்)

4.0 4.1 அனுமதிப்பத்திரம் அனுப்பப்படவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :

.........................................................................................................................................................

4.2 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :

.........................................................................................................................................................

4.3 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :

.........................................................................................................................................................

4.4 அனுமதிப்பத்திரம் அனுப்பப்படவேண்டிய முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :

.........................................................................................................................................................

5.0 5.1 பால் : பெண் - 1, ஆண் - 0
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

5.2 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

5.3 விவாகமானவர்/விவாகமாகாதவர் : விவாகமானவர் - 1
விவாகமாகாதவர் - 2 (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

5.4 பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

5.5 2020.08.24 ஆந் திகதியில் வயது : வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

5.6 கையடக்கத் தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

6.0 வர்த்தமானி அறிவித்தலின் 6.0 ஆம் பந்திக்கு இணங்க இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு பெற்றுள்ள கல்வித் தகைமைகள் தொடர்பான விபரங்கள் :

(அ) (i) பட்டம் :.........................................................................................

(ii) பட்டம் பெற்ற பல்கலைக்கழகத்தின் பெயர் :.........................................................................................

(iii) பட்டம் செல்லுபடியாகும் திகதி:.........................................................................................

(iv) பட்டப் பரீட்சையில் சித்தியடைந்த மொழி மூலம் :.........................................................................................

(v) பட்டப் பரீட்சையில் சித்தியடைந்த ஏனைய மொழிகள் :.........................................................................................

(1) ................................................

(2) ................................................

(ஆ) (i) நீர் தெரிவு செய்த மொழிபெயர்ப்பு மொழி மூலங்கள் இரண்டில் முதலாம் மொழியில் திறமைச் சித்தி பெற்ற க. பொ. த. (சா/த) பரீட்சை அல்லது அதற்குச் சமனான தகைமை பெற்ற பரீட்சை :................................................ வருடம் : ................................

(ii) நீர் தெரிவு செய்த மொழிபெயர்ப்பு மொழி மூலங்கள் இரண்டில் முதலாம் மொழியில் திறமைச் சித்தி பெற்ற க. பொ. த. (சா/த) பரீட்சை அல்லது அதற்குச் சமனான தகைமை பெற்ற பரீட்சை :................................................ வருடம் : ................................

7.0 நீர் ஏற்கனவே அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவியொன்றை வகிப்பவரா: ஆம்/ இல்லை

பதவியின் பெயர் :....................................................

நியமனம் பெற்ற திகதி :....................................................

தற்போது பணியாற்றும் நிறுவனம் மற்றும் அதன் முகவரி :........................................................

..........................................................................................................................................................

8.0 பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டவும்.

| |
|---|
| |

9.0 இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் இணங்க உண்மையானது என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ........................... ஆம் இலக்கமும் ..................... ஆம் திகதியும் கொண்ட பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் வெளிப்படுத்துகிறேன். அத்துடன், பரீட்சைச் சட்டதிட்டங்களுக்கு இணங்கச் செயற்படுவதற்கும், இந்தப் பரீட்சை தொடர்பான நிபந்தனைகளுக்கு இணங்க நான் தகுதியற்றவர் என்று தெரிய வருமிடத்து, பரீட்சைக்கு முன்னர் அல்லது அது நடைபெறும் போது எனது பரீட்சார்த்தித் தன்மையை இரத்துச் செய்வதற்கு எடுக்கப்படும் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வேன். மேலும் இந்த விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்ய முன்னர் வர்த்தமானி அறிவித்தலை நன்றாக வாசித்து விளங்கிக் கொண்டதாகவும், குறியீட்டு இலக்கங்களிலும் தரப்பட்ட தகவல்களிலும் பிழைகள் அல்லது எனது கவனயீனத்தால் மாற்றங்கள் ஏற்பட்டிருக்குமாயின் அதனால் ஏற்படும் இழப்புக்களை நான் ஏற்றுக்கொள்வதாகவும், அது தொடர்பில் மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கமாட்டேன் என்றும் உறுதியளிக்கிறேன். மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படுவேன் என்றும் வெளிப்படுத்துகிறேன்.

...........................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :......................

*10.0* **விண்ணப்பதாரரின் கையொப்பத்தைச் சான்றுப்படுத்துதல் :-**

.............................................. இல் வசிக்கும்/ இவ்வலுவலகத்தில் பணிபுரியும் ................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும் ............................ மாதம் .............................. ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ளார் என்றும் அதன் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

...........................
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :......................

சான்றுப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் :...............................
பதவி :................................
முகவரி :...................................
(உத்தியோகபூர்வ முத்திரை மூலம் உறுதிப்படுத்துங்கள்)

**குறிப்பு** : தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களின் கையொப்பம் குறித்த திணைக்களத்தின் தலைவரினால் அல்லது அவரின் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

*11.0* **திணைக்களத் தலைவரின் சான்றுப்படுத்தல் :-**

இந்த விண்ணப்பதாரர் இங்கு 5.0, 6.0 மற்றும் 7.0 ஆம் பந்திகளில் வழங்கியுள்ள தகவல்கள் உண்மையானவை என்றும், அவருடைய நடத்தை மற்றும் வேலைகள் திருப்திகரமானவை என்றும் உரிய வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க அவர் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்றும் இத்தால் சான்றுபடுத்துகிறேன். தெரிவு செய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்.

...........................
திணைக்களத் தலைவரின் கையொப்பம் மற்றும்
உத்தியோகபூர்வ முத்திரை.

திகதி :......................
பெயர் :...............................
பதவிப்பெயர் :................................
முகவரி :...................................

07-504

---

## பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019 (2020)

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2020, நவெம்பர் மாதம் நடத்தப்படும் என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இப்பரீட்சையானது அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரமே நடாத்தப்படும். அந்த அட்டவணைக்கு இணங்க பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரத்தைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதுடன் விண்ணப்பத்தில் பரீட்சைக்குத் தோற்றுகின்ற நகரத்தையும் அதற்குரிய நகர இலக்கத்தையும் அட்டவணை II இற்கு இணங்க சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட வேண்டிய தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் நகரங்கள் அந்த அட்டவணைக்கு இணங்கியதாக அமைதல் வேண்டும்.

2.0 பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் திறமை ஒழுங்கின் அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள், மாவட்ட சனத் தொகை விகிதாசார அடிப்படையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இன் பதவிகளுக்கு நியமிப்பதற்காகத் தெரிவு செய்யப்படுவர்.

3.0 (அ) வழங்கப்படும் நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நடைமுறைக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் ஒரு தொகை வெற்றிடங்களை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் இருப்பதற்கான அதிகாரத்தை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

(ஆ) அரசாங்க சேவை நியமனங்கள் நிர்வகிக்கப்படும் பொது நிபந்தனைகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2013.12.11 ஆந் திகதிய 1840/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப்பிரமாணக் குறிப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும், அப் பிரமாணக் குறிப்பில் செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பிறகு செய்யப்படும் திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணக்குறிப்பின் ஏற்பாடுகளுக்கும், 2009.02.20 ஆந் திகதிய 1589/ 30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரச சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகளும், உட்பட்ட வகையில் தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

(இ) நியமனம் செய்யும் முதலாம் சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது 03 வருடங்கள் கட்டாயம் சேவையாற்ற வேண்டும். எவ்வாறாயினும், நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் விசேட காரணங்களின் அடிப்படையில் அக்காலப் பகுதி முடிவடைவதற்கு முன்னர் எவரேனும் உத்தியோகத்தர் ஒருவரை இடமாற்றம் செய்வது அவசியமாயின், அவ்வாறு செய்வதற்கான அதிகாரம் நியமன அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ளது.

(ஈ) இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 03 வருடங்களுக்குள் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு முதலாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(உ) 01/ 2014 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு இணங்கவும் அதன் இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளுக்கு இணங்கவும் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 05 வருடங்களுக்குள் குறித்த அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெறவேண்டும்.

4.0 **சம்பளம்**.- 2016.02.25 ஆந் திகதிய 03/ 2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு இணங்க, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் III, II மற்றும் I ஆம் தரங்களுக்கான சம்பளத்திட்டம் ரூபா 28,940.00 - 10 × 300 - 11 × 350 -10 × 560 - 10 × 660 - ரூபா 47,990.00 ஆகும். ரூபா 31,940.00 வுக்கு அப்பால் செல்வதற்கு II ஆம் தரத்திற்கு தரம் உயர்வு பெறுவதும், ரூபா 35,790.00 வுக்கு அப்பால் செல்வதற்கு I ஆம் தரத்திற்கு தரம் உயர்வு பெறுவதும் அவசியமாகும்.

5.0 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். இப்பரீட்சையின் மூலம் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்களுக்கு உரித்துடைய ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு கட்டுப்பட வேண்டும்.

6.0 **தகைமைகள்**.- முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் III ஆம் தரத்திற்குரிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு பின்வரும் தகைமைகள் ஏற்புடையவையாகும் :-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியில் வயது 18 வருடங்களுக்கு குறையாமலும் 30 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதற்கிணங்க 2002.08.24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1990.08.24 ஆந் திகதி அல்லது அதன் பின்னர் பிறந்த திகதியைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரமே இதற்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்களாவர்) ;

(இ) சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உளத் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்;

(உ) பின்வரும் கல்வித் தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :

(1) கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம் மற்றும் கணிதம் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;

அத்துடன்

(2) கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் சாதாரண பொதுப்பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர) அனைத்துப் பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

**குறிப்பு**.- பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படும் க. பொ. த. (சா./ த.), க. பொ. த. (உ./ த.) தகைமைகளைத் தவிர சமனான வேறு சாதாரண தர மற்றும் உயர் தர தகைமைகள் மூலம் தோற்றுவதாயின் தகைமைகளின் ஏற்புடைமைத்தன்மை மற்றும் மேலே (உ) 1 மற்றும் 2 க்காக மாற்றாகும் இயலுமை தொடர்பாக உரிய நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்தியதன் பின்னர் நியமனம் வழங்குவது அல்லது வழங்காதிருத்தல் தொடர்பில் நியமன அதிகாரியினால் தீர்மானம் எடுக்கப்படும்.

**குறிப்பு**.- **ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பதவிக்குரிய அனைத்து தகைமைகளையும் 2020, ஒகத்து மாதம் 24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருப்பது கட்டாயமாகும்.**

7.0 **மாவட்ட சனத்தொகை விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்தல்**.- மாவட்டப் பெயர்ப்பட்டியல், அட்டவணை I இல் காட்டப்பட்டுள்ளது. வெற்றிடங்களுக்குப் போட்டியிடுவதற்குத் தெரிவு செய்யும் மாவட்டம் மற்றும் அதன் இலக்கம் என்பவற்றை அட்டவணை I இற்கு இணங்க விண்ணப்பப் படிவத்தில் சரியாகக் குறிப்பிட வேண்டும்.

(அ) சேவைக்கான ஆட்சேர்ப்பு பிரதிநிதித்துவ அடிப்படையில் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்தினதும் சனத்தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப ஒவ்வொரு மாவட்டத்திற்குமான பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையில் குறிப்பிட்டதொரு தொகை ஒதுக்கப்படும். ஏதேனும் ஒரு மாவட்டத்திலிருந்து நிரப்பவேண்டிய பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அம்மாவட்டத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே போட்டியிட முடியும்.

(i) ஏதேனும் மாவட்டமொன்றுக்கு மேலே குறிப்பிட்டவாறு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை அந்த மாவட்டத்திற்கு விண்ணப்பித்துள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து நிரப்ப முடியாத சந்தர்ப்பங்களில் அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை அருகிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் மத்தியில் அந்த மாவட்ட மாவட்டங்களின் சனத்தொகை விகிதாசாரத்தின் அடிப்படையில் மீளப் பகிரப்படும்.

(ii) நிரப்பப்படவுள்ள மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை சிறிதளவாக இருப்பின், அக்காரணத்தின் அடிப்படையில் மாவட்ட சனத்தொகையை அடிப்படையாகக் கொள்ள முடியாதவிடத்து திறமை ஒழுங்கில் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

(iii) பரீட்சையில் தேவையான குறைந்தபட்ச புள்ளிகளைப் பெறும் எண்ணிக்கை நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட குறைவாக இருக்குமிடத்து மாவட்ட சனத்தொகையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படமாட்டாது.

(ஆ) மாவட்டத்தைச் சேர்ந்தவராக கருதப்படுவதற்குக் காணப்பட வேண்டிய தகைமைகள்.- மாவட்டமொன்றின் வெற்றிடங்களுக்கு போட்டியிடுவதாயின் பின்வரும் விடயங்களில் ஒன்றையேனும் பூர்த்தி செய்திருக்க வேண்டும் :-

(i) விண்ணப்பதாரர் அந்த மாவட்டத்தில் பிறந்தவராக இருத்தல் வேண்டும் ;

அவ்வாறில்லாதவிடத்து

(ii) பரீட்சைக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய இறுதித் திகதிக்கு உடன் முன்னரான ஐந்து (05) வருட காலத்தில் அந்த மாவட்டத்தில் ஆகக் குறைந்தது மூன்று (03) வருடங்களாவது தொடர்ச்சியாக நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

அவ்வாறில்லாதவிடத்து

(iii) அவர் தொடர்ச்சியாக ஐந்து (5) வருடங்கள் அந்த மாவட்டத்தில் தனது இடைநிலைக் கல்வியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- (1) எழுத்துப் பரீட்சையில் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையில் அல்லது கேட்கப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மேற்குறித்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதை நிரூபிக்கும் பின்வரும் ஆவணங்களை உரிய விதத்தில் சமர்ப்பிக்கும் கடப்பாட்டைக் கொண்டுள்ளனர் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;

(ii) கிராம அலுவலர் சான்றிதழ் மற்றும் மூன்று (03) வருடங்கள் தொடர்ச்சியான வதிவை உறுதிப்படுத்தும் வாக்காளர் இடாப்புப் பெயர்ப்பட்டியல்;

(iii) மாணவர் செயலாற்றுகைப் படிவம்.

(2) எவரேனும் ஒரு விண்ணப்பதாரியின் தந்தை அல்லது தாய் அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் அல்லது கூட்டுத்தாபனம் ஒன்றில் இடமாற்றம் செய்யப்பட முடியுமான அரசாங்க சேவையை வகிப்பார்களாயின் அந்த விண்ணப்பதாரி தனது தந்தையின் அல்லது தாயின் பிறந்த இடத்தை தனக்குரிய மாவட்டமாகத் தெரிவுசெய்து கொள்வதற்கு சந்தர்ப்பமளிக்கப்படும். (அதற்காக விண்ணப்பதாரர் தனது பெற்றோரின் பிறந்த இடத்தையும் அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் அல்லது கூட்டுத்தாபனம் ஒன்றில் சேவையாற்றுவதையும் உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களை நேர்முகப் பரீட்சையின் போது அல்லது கோரப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சமர்ப்பிப்பது அவசியமாகும்.)

(3) எந்தவொரு விண்ணப்பதாரரும் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களின் பதவி வெற்றிடங்களுக்காகப் போட்டியிடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. தான் மிகவும் விரும்புகின்ற மாவட்டம் எது என்று ஒரு முறை குறிப்பிட்டதன் பின்னர் அதனைப் பின்னர் மாற்ற முடியாது.

8.0 நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 3% அங்கவீனமுடைய ஆட்களுக்காக ஒதுக்கப்படும். பரீட்சையில் தகைமைபெறும் அங்கவீன விண்ணப்பதாரர்களில் அதிக கூடிய புள்ளி மட்டத்திலுள்ள 3% மாத்திரம் நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்படுவர். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களின் புள்ளி மட்டம் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளில் ஆகக் குறைந்தது 50% ஆகவேனும் இருத்தல் வேண்டும். நியமனத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் விசேட மருத்துவப் பரிசோதனைச் சபையொன்றிற்கு அனுப்பப்படுவதுடன் நிபுணத்துவ மருத்துவ அறிக்கையொன்றின் மூலம் தமது அங்கவீன நிலையையும் அது குறித்த பதவிக்குரிய கடைமைகளை நிறைவேற்றுவதற்கு தடையாக அமையாது என்பதையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவத்தில் ஏற்றவாறு தமது அங்கவீன புனர்வாழ்வு நிபந்தனைகளின்கீழ் விண்ணப்பிப்பதாக குறிப்பிட வேண்டும் என்பதுடன் அங்கவீனர் அல்லாத ஒருவர் பொய்யான முறையில் அங்கவீனர் என்று குறிப்பிடக் கூடாது.

9.0 **பரீட்சைத் திட்டம்**.- (அ) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடத்தப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் தமது தனக்குரிய ஒரு மொழி மூலத்தை தெரிவு செய்ய வேண்டும் என்பதுடன் பரீட்சைக்குரிய அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் அந்த மொழி மூலத்திலேயே விடையளித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்கப்படமாட்டாது. இப்பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும் :-

| | புள்ளிகள் | காலம் |
|---|---|---|
| (1) மொழியாற்றல் | 100 | 2 1/ 2 மணித்தியாலம் |
| (2) உளச்சார்பு | 100 | 1 மணித்தியாலம் |

மொழியாற்றல்.- பரீட்சார்த்தியின் கருத்துக்களை வெளியிடுதல், கிரகித்தல், எழுத்துக்களின் பிரயோகம், மொழியும் மற்றும் கட்டுரையும், கொடுக்கப்பட்ட கடிதம் ஒன்றுக்கான பரும்படியத் தயாரித்தல், கொடுக்கப்பட்ட தரவுகளுக்கு ஏற்ப வரைபுகளையும் அட்டவணைகளையும் தயாரித்தல், கொடுக்கப்பட்ட பந்தியை சுருக்கி எழுதுதல், கொடுக்கப்பட்டுள்ள பல வாக்கியங்களின் கருத்தை தனி வாக்கியமாக எழுதுதல், எளிய இலக்கணப் பயன்பாடு தொடர்பான அறிவைப் பரீட்சிப்பதற்கான விடயம் சார்ந்த வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

உளச்சார்பு.- இந்த வினாப்பத்திரம் விண்ணப்பதாரிகளின் கணக்குத்திறன், தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், பொதுவான நுண்ணறிவு போன்றவற்றை அளவிடும் விதத்தில் விடயம் சார்ந்த கேள்விகளைக் கொண்டிருக்கும். பல்தேர்வு மற்றும் சுருக்க விடை வகையிலான 50 வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**குறிப்பு**.-

(i) கடைமை நோக்கங்களுக்காக விண்ணப்பதாரர்களின் தகைமைகளையும் ஆற்றல்களையும் சோதிக்கக் கூடிய வகையில் இந்த வினாப்பத்திரம் தயாரிக்கப்படும்.

(ii) எழுத்து மூலமான ஒவ்வொரு விடைப்பத்திரம் தொடர்பிலும் தெளிவற்ற கையெழுத்துக்கும் சொற்களின் எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும்.

(ஆ) இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருந்த போதிலும், தகைமை பெறுவதற்கு விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் ஆகக் குறைந்தது நாற்பது வீதமேனும் (40%) பெற வேண்டும் என்பதுடன், பரீட்சையின் மொத்தப் புள்ளிகளில் ஆகக் குறைந்தது ஐம்பது வீதமேனும் (50%) பெற வேண்டும். போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யும் விதத்தில் பெற்ற புள்ளிகளின் ஒழுங்குவரிசை கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டு நியமனம் வழங்கப்படும்.

(இ) பரீட்சையின் பெறுபேறுகள்.- விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சையின் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபால் மூலம் அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தினூடாக அறிவிக்கப்படும்.

10.0 **பொய்யான தகவல்களுக்கான தண்டனைகள்**.- விண்ணப்பப் படிவத்தை நிரப்பும் போது மிகவும் கவனமாக தகவல்களை நிரப்புதல் வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு இணங்க எவரேனும் ஒரு விண்ணப்பதாரர் தகுதியற்றவர் எனத் தெரிய வந்தால், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய விண்ணப்பதாரர் உரிமையை இரத்துச் செய்ய முடியும். விண்ணப்பதாரர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலொன்று பொய்யானவை என்று ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் தெரியவருமிடத்து அவரை அரசாங்க சேவையிலிருந்து நீக்க முடியும்.

11.0 **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். இத்தொகை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 02-03-02-13 ஆம் இலக்க வருமானத் தலைப்பின் கீழ் அரசாங்க வருமானத்திற்கு வைப்புச் செய்யப்படும் விதத்தில் நாட்டிலுள்ள ஏதேனும் தபால்/ உப தபால் நிலையத்தில் மாத்திரம் செலுத்தப்பட வேண்டும். விண்ணப்பதாரர்களின் பெயரில் பெறப்படும் பற்றுச்சீட்டை அதன் ஒரு விளிம்பை விண்ணப்பப் படிவத்தின் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். (பிற்காலப் பயன்பாட்டுக்காக பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை கைவசம் வைத்திருக்க வேண்டும்.) எந்தவொரு காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதுடன், காசுக் கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

12.0 **விண்ணப்பங்கள்**.- ஏ4 (21×29 cm) (சாதாரண ஹாஃப்ஷீட்) அளவுள்ள கடதாசியைப் பயன்படுத்தி,

(அ) இலக்கம் 01 முதல் 03 வரை முதலாம் பக்கத்திலும்,

(ஆ) இலக்கம் 04 முதல் எஞ்சியுள்ள பந்திகள் மற்றைய பக்கங்களிலும் வரும் விதத்திலும் விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

உரிய மாதிரிப்படிவத்திற்கு ஒத்திசைவாக அமையாத, உரிய தினத்திற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத மற்றும் சரியாகப் பூர்த்தி செய்யப்படாத பூரணமற்ற நிலையில் காணப்படும் விண்ணப்பப் படிவங்கள் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்யாமையினால் ஏற்படும் இழப்புக்களை விண்ணப்பதாரர்கள் பொறுப்பேற்றல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை கைவசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும் என்பதுடன், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதாக உள்ளதா என்று விண்ணப்பதாரர் சரிபார்த்துக் கொள்வது அவசியமாகும். அவ்வாறில்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்பட முடியும்.

**கவனிக்கவும்** : (1) பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பித்த நகரங்களைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. ஏதேனும் ஒரு நகரத்திற்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாதவிடத்து, இரண்டாவது விருப்பத்தேர்வாகக் குறிப்பிட்ட நகரத்திற்கு மாற்றப்படும் என்பதுடன், அந்த இரண்டாவது நகரத்திற்கும் போதியளவு விண்ணப்பதாரர்கள் காணப்படாதவிடத்து அருகிலுள்ள நகரமொன்றுக்கு மாற்றப்படும். பரீட்சை நடாத்தப்படும் நகரங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும்.

(2) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும் முதலெழுத்துக்களுடனான பெயர்களில் மாத்திரமே நியமனங்கள் வழங்கப்படும் என்பதனால் விண்ணப்பத்தில் சரியான முறையில் குறிப்பிட வேண்டும். நியமனம் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் பெயரில் திருத்தங்களைச் செய்வதற்கோ அல்லது ஏதேனும் ஒரு பகுதியைச் சேர்ப்பதற்கோ/ நீக்குவதற்கோ இடமளிக்கப்படமாட்டாது.

12.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பித்திருப்பார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி உரிய தினத்தில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதிப் பத்திரங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதிப்பத்திரம் அனுப்பப்படுவது இப்பதவிக்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாகக் கருதுவதாக அமையமாட்டாது. விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க தகைமைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளனவா என்று சோதிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லை எனத் தெரியவருமிடத்து அப்பரீட்சைக்கான பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படும்.

12.2 விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2019 (2020)" என்றும் போட்டியிடும் மாவட்டத்தையும் குறிப்பிட வேண்டும்.

12.3 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2020.08.24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு (நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
தபாற்பெட்டி இல.1503,
கொழும்பு.

13.0 **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அவ் அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்களின் பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்காதவிடத்து அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது அவசியமாகும். அதன் போது உம்மிடமுள்ள விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பத்தை தபாலில் அனுப்பிய பதிவுத் தபால் பற்றுச்சீட்டு என்பவற்றை தயாராக வைத்துக்கொணடு பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், பரீட்சையின் பெயர் என்பவற்றைக் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திடம் விசாரிக்குமாறு அறிவிக்கப்படுவதுடன், நீங்கள் கொழும்புக்கு வெளியிலுள்ள ஒரு விண்ணப்பதாரராயின், உமது அந்த விபரங்களுடன் ஃபெக்ஸ் மூலம் அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றை பெற்றுக்கொள்வதற்காக உமது ஃபெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஃபெக்ஸ் இலக்கத்துக்கு அனுப்பிவிட்டு விசாரிப்பது பொருத்தமானதாகும்.

விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்திலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும். ஏதேனும் ஒரு நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் தனது கையொப்பத்தை நிறுவனத் தலைவரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் மூலமும், அத்தகைய விண்ணப்பதாரர் அல்லாவிடின் தமது கையொப்பத்தை அரச பாடசாலையொன்றின் அதிபர்/ ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதிவான், சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவர், வழக்கறிஞர் ஒருவர், பிரசித்த நொத்தாரிசு ஒருவர், முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவிநிலை மட்ட அலுவலர் ஒருவர் அல்லது தலைமை பிக்கு ஒருவர் அல்லது மற்றைய மதங்களின் புனிதத் தலம் ஒன்றுக்குப் பொறுப்பாக உள்ள அல்லது மதகுருமார்களில் குறிப்பிடத்தக்க அந்தஸ்திலுள்ள ஒருவர் மூலம் சான்றுப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். தமக்கு குறித்துரைக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டுமென்பதுடன் அவ்வாறு தோற்றும் முதற் தடவையிலேயே பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது.

14.0 பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையும் விதத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காகப் பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும் பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடியவாறு முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்தில் நுழைதல் வேண்டும். மேலும் அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரையில் பரீட்சை அதிகாரிகளால் விண்ணப்பதாரியை அடையாளம் காணக் கூடிய விதத்தில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

15.0 விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்குவதை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவர் என்று ஏற்றுக்கொண்டதாகக் கருதக் கூடாது. பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறுமிடத்து அவர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக வேண்டி ஏற்படும்.

16.0 இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரியும் இந்த வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சைச் சட்டதிட்டங்களுக்கு இணங்கச் செயற்படுவதற்கான கடப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

17.0 இதன் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவித்தல்களில் ஏதேனும் ஒத்திசைவின்மைகள் காணப்படுமாயின், அச்சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலின் அடிப்படையில் செயற்படுதல் வேண்டும்.

எஸ். ஆலோக்கபண்டார,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2020, யூலை 03.

(அலுவலக உபயோகத்திற்காக)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019 (2020)**

Open Competitive Examination for Recruitment to Grade III of Management Service Officers Service - 2019 (2020)

(தரப்பட்டுள்ள கூட்டினுள் சரியான குறியீட்டை/இலக்கத்தை தெளிவாகக் குறிப்பிடவும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

* வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரம் மற்றும் நகர இலக்கத்தைக் குறிப்பிடவும்.
(பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் நகரங்களையும் நகர இலக்கங்களையும் அறிவதற்கு அட்டவணை II ஐப் பார்க்கவும்.)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |

* பதவி வெற்றிடங்களுக்குப் போட்டியிடுவதற்கு வர்த்தமானி அறிவித்தலின் 7.0 ஆம் பந்திக்கு இணங்க நீர் தெரிவு செய்யும் மாவட்டம்

(மாவட்டங்களின் இலக்கங்களைக் கொண்ட அட்டவணை I ஐப் பார்க்கவும். உரிய மாவட்டத்தையும் மாவட்ட இலக்கத்தையும் கூட்டினுள் எழுதவும்)

| மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|
| | |

* நீர் பரீட்சைக்குத் தோற்றுவது வர்த்தமானி அறிவித்தலின் 8.0 பந்திக்கு இணங்க அங்கவீனர் புனர்வாழ்வு நிபந்தனைகளின் கீழா?

ஆம் - 1
இல்லை - 2 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

(அங்கவீனர் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே இப்பகுதியில் "ஆம்" என்று குறிப்பிட வேண்டும் என்பதனால் நிரப்புவதற்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தலின் 8.0 ஆம் பந்தியை நன்றாக வாசிக்கவும்.) (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

1.0 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :----.
1.2 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ----.

2.0 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :----.
2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
2.3 அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :-----.

3.0 3.1 தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

3.2 பால் : ஆண்-0 பெண்-1 ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

3.3 பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.4 2020.08.24 ஆந் திகதியில் வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.5 கையடக்கத் தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

4.0 4.1 எப்போது முதல் மாவட்டத்தில் வசிக்கிறீர்? :-----.

4.2 உதவி அரசாங்க அதிபர் பிரிவு/பிரதேச செயலாளர் பிரிவு : -----.

4.3 கிராம அலுவலர் பிரிவு :-----.

5. கல்வித் தகைமைகள் :

5.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரம் :

(i) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் :----.

(ii) பரீட்சை இலக்கம் :----.

(iii) பெறுபேறுகள்.-

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

5.2 க.பொ.த. (உ. த.) பரீட்சை பற்றிய விபரம்:

(i) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் :----.

(ii) பரீட்சை இலக்கம் :----.

(iii) பெறுபேறுகள்.-

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

5.3 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருப்பின்.-

(i) பல்கலைக்கழகம் :----.

(ii) பட்டம் :----.

(iii) பரீட்சை நடைபெற்ற வருடம் :----.

6. ஏனைய தகைமைகள் :----.

7. நீர் எப்போதாவது ஏதேனும் ஒரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டவரா?

(உரிய கூட்டினுள் ✓ அடையாளமிடவும்) (ஆம் எனின் விபரங்களைக் குறிப்பிடவும்)

ஆம் ☐ இல்லை ☐

......................................................................

......................................................................

8. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரம் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.

(ii) பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் :----.

(iii) செலுத்திய தொகை :----.

| |
|---|
| பற்றுச்சீட்டைக் கழராதவாறு இங்கே ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை கையில் வைத்திருப்பது பயனுள்ளதாக அமைய முடியும்) |

9. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு உட்பட்ட வரையில் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் கௌரவத்துடன் வெளிப்படுத்துகின்றேன். இங்கு ஏதேனும் ஒரு பகுதியை நிரப்பாமை யினால் மற்றும்/அல்லது பிழையாக நிரப்பியமையினால் ஏற்படக்கூடிய இழப்புக்களை ஏற்பதற்கு உடன்படுகின்றேன். அத்துடன் இதன் அனைத்துப் பகுதிகளையும் சரியாக நிரப்பியுள்ளதாக வெளிப்படுத்துகிறேன்.

(ஆ) என்னால் வெளிப்படுத்தப்பட்ட இக்கூற்று பொய்யானது என்று நிரூபிக்கப்பட்டால், நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் தகுதியற்றவராவேன் என்றும் நியமனம் கிடைத்ததன் பின்னர் சேவையிலிருந்து நீக்கப்பட முடியும் என்றும் நான் அறிவேன்.

(இ) மேலும் பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படுவேன் என்றும் வெளிப்படுத்துகிறேன்.

(ஈ) இங்கு குறிப்பிட்ட தகவல்களில் எந்தவொன்றையும் பின்னர் மாற்றமாட்டேன்.

----
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்துதல்.-

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி/............................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் எனது முன்னிலையில் ............................ கையொப்பமிட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும் அதற்கான பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்றும் சான்றுப்படுத்துகிறேன்.

----
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :----.

சான்றுப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப் பெயர்.-----.
பதவி.-----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை மூலம் உறுதிப்படுத்துங்கள்)

**அட்டவணை I**

மாவட்டங்களின் பெயர்ப் பட்டியல் மற்றும் இலக்கங்கள்

| மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| மாத்தளை | 04 |
| கண்டி | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| வவுனியா | 13 |

| மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| புத்தளம் | 17 |
| குருநாகல் | 18 |
| அநுராதபுரம் | 19 |
| பொலன்னறுவை | 20 |
| பதுளை | 21 |
| மொனறாகலை | 22 |
| கேகாலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

**அட்டவணை** II

பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் நகரங்கள்

| மாவட்டம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1. கொழும்பு | கொட்டாஞ்சேனை | 01 |
| | மருதானை | 02 |
| | பொரளை | 03 |
| | கறுவாத்தோட்டம் | 04 |
| | பம்பலப்பிட்டி | 05 |
| | ஹவ்லொக்டவுன் | 06 |
| | நுகேகொடை | 07 |
| | மொறட்டுவை | 08 |
| | பிலியந்தலை | 09 |
| | ஹோமாகம | 10 |
| | மஹரகம | 11 |
| | ஹன்வெல்ல | 12 |
| | அவிஸ்ஸாவெல | 13 |
| 2. கம்பஹா | நீர்கொழும்பு | 14 |
| | மினுவாங்கொடை | 15 |
| | திவுலப்பிட்டிய | 16 |
| | வேயாங்கொடை | 17 |
| | கம்பஹா | 18 |
| | ஜா- எல | 19 |
| | வத்தளை | 20 |
| | களனி | 21 |
| | தொம்பே | 22 |
| 3. களுத்துறை | ஹொரணை | 23 |
| | பாணந்துறை | 24 |
| | களுத்துறை | 25 |
| | மத்துகம | 26 |
| | அளுத்கம | 27 |
| 4. மாத்தளை | மாத்தளை | 28 |
| | கலேவெலை | 29 |
| | நாவுல | 30 |
| | லக்கலை பள்ளேகம | 31 |

| மாவட்டம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 5. கண்டி | கண்டி | 32 |
| | கட்டுகஸ்தோட்டை | 33 |
| | தெல்தெனிய | 34 |
| | வத்தேகம | 35 |
| | நுகவெலை | 36 |
| | கலகெதர | 37 |
| | கம்பளை | 38 |
| 6. நுவரெலியா | ஹெந்துனுவெவ | 39 |
| | நுவரெலியா | 40 |
| | வத்துமுல்ல | 41 |
| | ஹற்றன் | 42 |
| | கினிகத்ஹேன | 43 |
| 7. காலி | அம்பலாங்கொடை | 44 |
| | காலி | 45 |
| | பத்தேகம | 46 |
| 8. மாத்தறை | வெலிகம | 47 |
| | மாத்தறை | 48 |
| | கம்புறுபிட்டி | 49 |
| | ஹக்மனை | 50 |
| | தெய்யந்தர | 51 |
| | திக்வெல்ல | 52 |
| | அக்குரஸ்ஸ | 53 |
| | கொட்டபொல | 54 |
| 9. அம்பாந்தோட்டை | பெலியத்தை | 55 |
| | வலஸ்முல்ல | 56 |
| | வீரகெற்றிய | 57 |
| | தங்கல்ல | 58 |
| | அம்பலாந்தோட்டை | 59 |
| | அம்பாந்தோட்டை | 60 |
| | திஸ்ஸமஹாராம | 61 |
| 10. யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | 62 |
| | யாழ்ப்பாணம் | 63 |
| | தெல்லிப்பளை | 64 |
| | பருத்தித்துறை | 65 |
| 11. மன்னார் | மன்னார் | 66 |
| | முருங்கன் | 67 |
| 12. முல்லைத்தீவு | முல்லைத்தீவு | 68 |
| 13. வவுனியா | வவுனியா | 69 |
| 14. திருகோணமலை | கந்தளாய் | 70 |
| | திருகோணமலை | 71 |
| | மூதூர் | 72 |
| | பதவி பராக்கிரமபுரம் | 73 |
| | கிண்ணியா | 74 |

| மாவட்டம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 15. மட்டக்களப்பு | மட்டக்களப்பு | 75 |
| | ஏறாவூர் | 76 |
| | காத்தான்குடி | 77 |
| 16. அம்பாறை | அம்பாறை | 78 |
| | சேரங்கடை | 79 |
| | கல்முனை | 80 |
| | அக்கரைப்பற்று | 81 |
| | சம்மாந்துறை | 82 |
| 17. புத்தளம் | வென்னப்புவ | 83 |
| | மாதம்பை | 84 |
| | சிலாபம் | 85 |
| | புத்தளம் | 86 |
| 18. குருநாகல் | குளியாப்பிட்டி | 87 |
| | பிங்கிரிய | 88 |
| | நாரம்மல | 89 |
| | பொல்கஹவலை | 90 |
| | குருநாகல் | 91 |
| | இப்பாகமுவ | 92 |
| | தொம்பகஸ்லந்தை | 93 |
| | மொறதிஹ | 94 |
| | நிக்கவெரட்டிய | 95 |
| | மாகோ | 96 |
| 19. அநுராதபுரம் | மதவாச்சி | 97 |
| | கெக்கிராவை | 98 |
| | அநுராதபுரம் | 99 |
| | கலென்பிந்துனுவெவ | 100 |
| | கஹட்டகஸ்திகிலிய | 101 |
| 20. பொலன்னறுவை | பொலன்னறுவை | 102 |
| | ஹிங்குரக்கொட | 103 |
| 21. பதுளை | பண்டாரவளை | 104 |
| | வெலிமடை | 105 |
| | பதுளை | 106 |
| | பசறை | 107 |
| | மகியங்கனை | 108 |
| | கிராந்துருக்கோட்டை | 109 |
| | ஹசலக்க | 110 |
| 22. மொனராகலை | பிபில | 111 |
| | மொனராகலை | 112 |
| | வெள்ளவாய | 113 |
| 23. கேகாலை | கேகாலை | 114 |
| | ரம்புக்கனை | 115 |
| | மாவனெல்லை | 116 |
| | ருவன்வெல்ல | 117 |

| மாவட்டம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 24. இரத்தினபுரி | எஹெலியகொடை | 118 |
| | இரத்தினபுரி | 119 |
| | பெல்மடுல்ல | 120 |
| | பலாங்கொடை | 121 |
| | கலவானை | 122 |
| | எம்பிலிப்பிட்டிய | 123 |
| 25. கிளிநொச்சி | கிளிநொச்சி | 124 |
| | பளை | 125 |

07-505

---

## பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2019 (2020)

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2020, நவெம்பர் மாதம் நடாத்தப்படும் என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2.0 அரசாங்க சேவையில் நிரந்தர நியமனங்களைக் கொண்ட, அந்நியமனங்களில் நிரந்தரமாக்கப்பட்டிருக்கும் 03/2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு இணங்க ஆரம்ப நிலையிலுள்ள PL வகுதிக்கான சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளம் பெறுகின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் MN - 01- 2016 சம்பளக் குறியீட்டின்கீழ் சம்பளம் பெறுகின்ற உத்தியோகத்தர்களுக்காக இப்பரீட்சை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் நடத்தப்படும். அந்த நகரங்களும் நகரங்களுக்கான இலக்கங்களும் கீழே தரப்பட்டுள்ளன. போதியளவு பரீட்சார்த்திகள் முன்வராமை அல்லது வேறு ஏதேனும் காரணங்களினால் ஏதேனும் ஒரு பரீட்சை நிலையத்தை இரத்துச் செய்து பரீட்சார்த்திகளின் இரண்டாம் தெரிவிற்கு ஏற்ப பரீட்சை நிலையத்தை தீர்மானிக்கும் தற்றுணிபு பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

| நகரம் | நகர இலக்கம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|---|
| கொழும்பு | 01 | திருகோணமலை | 14 |
| கம்பஹா | 02 | மட்டக்களப்பு | 15 |
| களுத்துறை | 03 | அம்பாறை | 16 |
| மாத்தளை | 04 | புத்தளம் | 17 |
| கண்டி | 05 | குருநாகல் | 18 |
| நுவரெலியா | 06 | அனுராதபுரம் | 19 |
| காலி | 07 | பொலநறுவை | 20 |
| மாத்தறை | 08 | பதுளை | 21 |
| அம்பாந்தோட்டை | 09 | மொனராகலை | 22 |
| யாழ்ப்பாணம் | 10 | கேகாலை | 23 |
| மன்னார் | 11 | இரத்தினபுரி | 24 |
| முல்லைத்தீவு | 12 | கிளிநொச்சி | 25 |
| வவுனியா | 13 | | |

3.0 (i) இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அவரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் வர்த்தமானியில் தனியாக அச்சிடப்பட்டுள்ளன. இச்சட்டங்களை மீறுமிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

4.0 **விண்ணப்பதாரர்கள் இப்பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய மொழி மூலம்**.- இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிமூலங்களில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தங்கள் விருப்பத்திற்கு இணங்க அவற்றில் ஒரு மொழிமூலத்தில் மாத்திரம் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்பதுடன் விண்ணப்பிக்கும் மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

5.0 **சம்பளம்**.- 2016.02.25 ஆந் திகதிய 03/ 2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு இணங்க, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் III, II மற்றும் I ஆம் தரங்களுக்கான மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம் ரூபா 28,940 - 10 x 300 - 11 x 350 - 10 x 560 - 10 x 660 - ரூபா 47,990 ஆகும் என்பதுடன், ரூபா 31,940 வுக்கு அப்பால் செல்வதற்கு II ஆம் தரத்திற்கு தரமுயர்வு பெறுவதும் ரூபா 35,790 வுக்கு அப்பால் செல்வதற்கு I ஆம் தரத்திற்கு தரமுயர்வு பெறுவதும் அவசியமாகும். இவை தவிர அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் உங்களுக்கு உரித்தாகும்.

**குறிப்பு**.- நியமனம் வழங்கப்படும் காலப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்படும் சம்பள அதிகரிப்புச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட வகையில், சம்பள அதிகரிப்பு அனுகூலங்கள் வழங்கப்படும்.

6.0 **சேவை நிபந்தனை** :

(i) வழங்கப்படும் நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் வலுப்பெறும் திகதி என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் ஒரு தொகை வெற்றிடங்களை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் இருப்பதற்கான அதிகாரத்தை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

(ii) அரசாங்க சேவை நியமனங்கள் நிர்வகிக்கப்படும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2013.12.11 ஆந் திகதிய 1840/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும், அப் பிரமாணக் குறிப்பில் செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பிறகு செய்யப்படும் திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கும், 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகளும், உட்பட்ட வகையில் தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

(iii) இந்தப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்களுக்கு நியமனத் திகதியிலிருந்து ஒரு வருட கால பதில் கடமை அடிப்படையில் நியமனம் வழங்கப்படும். அவர்களின் பதவிகள் நிரந்தரமானவையாகும். ஓய்வூதியம் உரித்துடையவையாகும். முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 03 வருடங்களுக்குள் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு முதலாம் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iv) இந்தப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் விண்ணப்பதாரர்களை இடமாற்றம் செய்வதற்கும், இலங்கையில் எந்தவொரு பகுதிக்கும் நியமிப்பதற்கு முடியும்.

(v) இந்த நியமனம் வழங்கப்படும் சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது 03 வருடங்கள் கட்டாயம் சேவையாற்ற வேண்டும். எவ்வாறாயினும், நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் விசேட காரணங்களின் அடிப்படையில் அக்காலப் பகுதி முடிவடைவதற்கு முன்னர் எவரேனும் உத்தியோகத்தர் ஒருவரை இடமாற்ற செய்வது அவசியமாயின், அவ்வாறு செய்வதற்கான அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

(vi) நியமனம் கிடைத்து 05 வருடங்கள் பூர்த்தியடைவதற்கு முன்னர் 01/ 2014 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை மற்றும் அதன் இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளுக்கு இணங்க இரண்டாம் அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெறுவது அவசியமாகும்.

**குறிப்பு**.- மாகாண சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

7.0 **நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்படும் முறை**.- அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவிகளை வகிக்கும், அப்பதவிகளில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள 03/2016 ஆந் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு இணங்க ஆரம்ப மட்டத்தில் PL வகுதிக்குரிய சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளங்கள் பெறுகின்ற அலுவலர்களும் MN - 01 - 2016 சம்பளக் குறியீட்டின்கீழ் சம்பளம் பெறும் அலுவலர்களும் மாத்திரம் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர். பரீட்சார்த்திகள் தங்களது விருப்பத்தின் அடிப்படையில்

ஒரு மொழி மூலத்தில் மாத்திரம் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சையின் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கையில் ஆகக் குறைந்தது ஐம்பது சதவீதமேனும் (50%) பெறுவது அவசியமாகும். திறமை ஒழுங்கு மற்றும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை என்பவற்றின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும்.

8.0 **தகைமைகள்**.- இந்தப் பரீட்சையில் போட்டியிடுவதற்கு தகைமை பெறும் பொருட்டு ஒவ்வொரு விண்ணப்பதாரரும்,

(i) அரசாங்க சேவையில் நிரந்தர நியமனங்களைக் கொண்ட அந்த நியமனங்கள் நிரந்தரமாக்கப்பட்டிருக்கும் 03/ 2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு இணங்க ஆரம்ப நிலையிலுள்ள PL வகுதிக்கான சம்பளக் குறியீட்டின்கீழ் சம்பளம் பெறுகின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் MN-01-2016 சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளம் பெறுகின்ற உத்தியோகத்தர்களாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்கள் கோரும் இறுதித் திகதியில் நிரந்தர நியமனம் ஒன்றில் குறைந்தபட்சம் 5 வருடங்கள் உயிர்ப்பான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருக்க வேண்டுமென்பதுடன் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 01/ 2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் சட்டதிட்டங்களுக்கு அமைய ஒழுக்காற்றுத் தண்டனைக்கு ஆளாகியிருத்தல் கூடாது. அது திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தலும் வேண்டும் ;

(iii) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் மொழி/ இலக்கியம் மற்றும் எண்கணிதம்/ தூயகணிதம்/ அடிப்படைக் கணிதம்/ வர்த்தக எண்கணிதம் அடங்கலாக ஆறுக்கு (06) குறையாத பாடங்களில் இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும்:

**குறிப்பு**: 2001.11.26 ஆந் திகதிக்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 8 ஆம் தரம் சித்தியடைந்த ஆரம்ப மட்டச் சேவைத் தொகுதியின் அலுவலர்களுக்கு (கனிஷ்ட ஊழியர்கள்) முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தொடர்ச்சியான பரீட்சை வாய்ப்புக்கள் இரண்டை வழங்குவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. அதன்படி இத் தடவை 2001.11.26 ஆந் திகதிக்கு முன்னர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 8 ஆம் தரம் சித்தியடைந்த ஆரம்ப மட்டச் சேவைத் தொகுதியின் அலுவலர்களுக்கு (கனிஷ்ட ஊழியர்கள்) இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்க முடியும்.

(iv) விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும் ;

(v) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உளத் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்;

(vi) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அனைத்துத் தகைமைகளையும் 2020, ஓகத்து மாதம் 24 ஆந் திகதியில் பூர்த்தி செய்திருப்பது அவசியமாகும்.

**குறிப்பு** :

(1) ஏதேனுமொரு பதவியில் நிரந்தரமாக நியமிக்கப்பட முன்னர் சேவையாற்றியுள்ள அல்லது ஒரு பதவியில் நிரந்தரமாக நியமிப்பதற்கான நிபந்தனையாக சேவை ஆற்றியுள்ள அல்லது பயிற்சி பெறும் காலப்பகுதி மேலே (ii) இல் குறிப்பிடப்பட்ட தகைமையைப் பெறுவதற்கான ஐந்து வருட காலத்திற்காகக் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. யாதாயினும் ஒரு பதவியில் நிரந்தர நியமனம் பெறுவதற்கு முன்னர் சேவையாற்றியுள்ள தற்காலிக/ அமைய சேவைக் காலப்பகுதி மேலே (ii) இல் குறிப்பிடப்பட்ட தகுதி பெறும் ஐந்து வருட காலப்பகுதிக்காகக் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.

(2) நியமனத்திற்காக விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவாராயின் அவரை விடுவிப்பதற்கு திணைக்களத் தலைவர் விரும்புவது அவசியமாகும்.

(3) பகுதியளவு தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் ஈடுபட்டுள்ள அல்லது ஏதேனும் பணிகளுக்காகப் பயிற்சியளிக்கப்பட்டுள்ள அல்லது அரசாங்கத்தினால் விசேடமாக பயிற்சியளிக்கப்பட்டுள்ள எந்தவொரு தரத்திலுமுள்ள ஊழியர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவர்களாவார். உதாரணமாக பொறியியல் மற்றும் தொழிற்சாலைத் தரங்களிலுள்ள ஊழியர்கள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்திலுள்ள பொது சுகாதார ஊழியர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெறமாட்டார்கள். எவரேனும் ஊழியர் ஒருவர் தான் தகுதியானவரா அல்லது தகுதியற்றவரா என சந்தேகம் ஏற்படுமிடத்து, அது தொடர்பில் விண்ணப்பதாரர், திணைக்களத் தலைவர் ஊடாக இணைந்த சேவைப் பணிப்பாளர் நாயகத்திடம் அது தொடர்பில் விசாரித்தல் வேண்டும்.

அதேபோல் இவ்விடயம் தொடர்பாக எவரேனும் ஊழியர் ஒருவரின் தகைமை தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் விசாரிக்கும் போது சம்பள அளவுத் திட்டத்துடன் ஊழியரின் பணிகள் தொடர்பான முழுமையான விபரமொன்று குறித்த திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன் அந்தப் பணியை செய்வதற்கான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக விண்ணப்பதாரருக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றியும் அத்தகைய பயிற்சிகள் வழங்கப்பட்டிருப்பின் அந்தப் பயிற்சியின் தன்மை மற்றும் காலப் பகுதி என்பவற்றையும் குறிப்பிடுதல் வேண்டும்.

(4) அரசாங்க சேவையில் தற்காலிக மற்றும் அமைய ஊழியர்கள், சபைகள் கூட்டுத்தாபனங்கள் மற்றும் அவை போன்ற துறைகளிலுள்ள ஊழியர்கள் இந்தப் பரீட்சையில் போட்டியிடுவதற்கு தகுதியானவர்களாக மாட்டார்கள்.

(5) தபால் திணைக்களத்தைச் சேர்ந்த இணைந்த சேவையிலுள்ள ஊழியர்களைத் தவிர அத்திணைக்களத்திலுள்ள மேலே 4 இல் குறிப்பிடப்பட்ட விதத்தில் பயிற்சியளிக்கப்பட்டுள்ள எந்தவொரு ஊழியரும் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவர்களாவர்.

(6) விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் விண்ணப்பதாரர்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள உரிய தகைமைகளை தாம் பூர்த்தி செய்துள்ளதாகத் திருப்தியடைதல் வேண்டும். இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் இல்லாது பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள் பரீட்சையில் போதியளவு புள்ளிகளைப் பெற்றாலும் நியமனம் பெறுவதற்குத் தகுதியற்றவர்களாவர்.

9.0 **விண்ணப்பங்கள்**.- (அ) (i) A4 (21× 29 செ.மீ.) (சாதாரண ஹாஃப்ஷீட்) அளவுள்ள கடதாசியொன்றைப் பயன்படுத்தி, இலக்கம் 01 முதல் 03 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும், இலக்கம் 04 முதல் எஞ்சியுள்ள பந்திகள் மற்றைய பக்கங்களிலும் அமையும் விதத்தில் விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பத்தை தயாரிக்கும்போது அதன் தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரியை ஒத்ததாகத் தயாரிக்க வேண்டும் என்பதுடன் ஒரு விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பத்தை மாத்திரமே அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை அல்லது பூர்வாங்கப் பிரதியை அனுப்பக் கூடாது என்று அறியத் தருகின்றேன். உரிய தகவல்களை தத்தமது கையெழுத்துக்களால் தெளிவாக எழுதுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒத்திசைவில்லாத மற்றும் முழுமையற்ற தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதுடன் பூர்த்தி செய்த விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதியொன்றை கைவசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதாக உள்ளதா என்று விண்ணப்பதாரர் சரிபார்த்துக் கொள்வது அவசியமாகும். அவ்வாறில்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும் முதலெழுத்துக்களுடனான பெயர்களில் மாத்திரமே நியமனங்கள் வழங்கப்படும் என்பதனால் விண்ணப்பத்தில் பெயரை சரியான முறையில் குறிப்பிட வேண்டும். நியமனம் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் பெயரில் திருத்தங்களைச் செய்வதற்கோ அல்லது ஏதேனும் ஒரு பகுதியைச் சேர்ப்பதற்கோ/நீக்குவதற்கோ இடமளிக்கப்படமாட்டாது.

(ஆ) **பரீட்சைக் கட்டணங்கள்**.- பரீட்சைக்கான கட்டணம் ரூபா 600.00 ஆகும். அக்கட்டணத்தை 20-03-02-13 என்ற பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பில் வரவு வைக்கப்படும் விதத்தில் நாட்டின் எந்தவொரு தபால் நிலையத்திலும்/உப தபால் நிலையத்திலும் காசாகச் செலுத்தி விண்ணப்பதாரரின் பெயரில் பெறப்படும் பற்றுச்சீட்டை, அதன் ஒரு ஓரத்தில் விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழறாத விதத்தில் ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்திற்காகக் காசுக் கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீளளிப்புச் செய்யப்படவோ அல்லது மற்றொரு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது. மேலும் பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை கையிருப்பில் வைத்திருப்பது பயனுள்ளதாக அமைய முடியும்.

(இ) விண்ணப்பம் உரிய முறையில் தெளிவாக விண்ணப்பதாரரின் கையெழுத்தினாலேயே பூர்த்தி செய்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியான 2020.08.24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு,

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்புக் (நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
தபாற்பெட்டி இல.1503,
கொழும்பு.

என்ற முகவரிக்கு, தாங்கள் சேவையாற்றும் திணைக்களத் தலைவர் ஊடாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

10.0 விண்ணப்பத்தின் இறுதியில் தரப்பட்டுள்ளவாறான உறுதிப்படுத்தலொன்றை திணைக்களத் தலைவர் வழங்குதல் வேண்டும். உரிய தினத்தின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைத் தெளிவாக எழுதுதல் வேண்டும். எவரேனும் விண்ணப்பதாரர் ஒருவர் இச்செயலொழுங்கைப் பின்பற்றத் தவறுவாறாயின் அவருடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட முடியும். 2020.08.24 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிப்பதற்காக தனது விண்ணப்பப்படிவத்தை திணைக்களத் தலைவரிடம் நேர காலத்துடன் சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்திலுள்ளவாறான விண்ணப்பதாரரின் பதவி மற்றும் சேவை நிலையம், பரீட்சை தொடர்பான அனைத்து விடயங்களுக்கும் ஏற்புடையதாகும் என்பதுடன், விண்ணப்பத்தை அனுப்பியதன் பின்னர் அதில் ஏற்படும் மாற்றங்கள் எதுவும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

11.0 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள உத்தியோகத்தர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சையின் நேரசூசி ஒன்றுடன் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும். அதனுடன் இணைந்த வகையில் அவ்வாறு குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். அந்த அனுமதிப்பத்திரம் இன்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. அவ் அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்களின் பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்காதவிடத்து அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது அவசியமாகும். அதில் உமது முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், பரீட்சையின் பெயர் என்பவற்றை குறிப்பிட்டு பரீட்சைத் திணைக்களத்திடம் விசாரிக்குமாறு அறிவிக்கப்படுவதுடன், நீங்கள் கொழும்புக்கு வெளியிலுள்ள ஒரு விண்ணப்பதாரராயின், உமது அந்த விபரங்களுடன் பெக்ஸ் மூலம் அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றை உமக்கு அனுப்புவதற்காக உமது பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பெக்ஸ் இலக்கத்துக்கு அனுப்பிவிட்டு விசாரிப்பது பொருத்தமானதாகும். அவ்வாறு விசாரிக்கும் போது, தேவையான போது சமர்ப்பிப்பதற்காக உம் கைவசம் வைத்தள்ள விண்ணப்பத்தின் பிரதியையும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியையும், விண்ணப்பத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்த பற்றுச்சீட்டையும் தயார்படுத்தி வைத்துக்கொள்வது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர்களிடம் தங்களது கையொப்பத்தை சான்றுப்படுத்தி அனுமதிப்பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

12.0 பரீட்சைக்கு அனுமதி வழங்கப்படுவது அதற்கான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக ஏற்றுக்கொண்டதாக அமையமாட்டாது. அவ்வாற அனுமதியளிக்கப்பட்டதன் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் பரீட்சிக்கப்படுவதற்கு உட்பட்டதாகும். விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்குவதை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவர் என்று ஏற்றுக்கொண்டதாகக் கருதக் கூடாது.

13.0 பரீட்சையின் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்படும். இவை தவிர, விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபால் மூலம் அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தினூடாக அறிவிக்கப்படும்.

14.0 **விண்ணப்பதாரர்களின் ஆளடையாளம்.-** பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்காகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்கள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காகப் பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும் பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடியவாறு முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்தில் நுழைதல் வேண்டும். மேலும் அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரையில் பரீட்சை அதிகாரிகளால் விண்ணப்பதாரியை அடையாளம் காணக் கூடிய விதத்தில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

15.0 பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தை வைத்துள்ள உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைத் தோற்றுவதற்கு முடியுமான விதத்தில் திணைக்களத் தலைவர் கடமை லீவு வழங்குதல் வேண்டும். பிரயாணக் கட்டணங்கள் செலுத்தப்படமாட்டாது.

16.0 **பொய்யான தகவல்களுக்கான தண்டனைகள்**.- விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது மிக கவனமாக தகவல்களை நிரப்புதல் வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு இணங்க எவரேனும் ஒரு விண்ணப்பதாரர் தகுதியற்றவர் எனத் தெரிய வந்தால், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய விண்ணப்பதாரர் உரிமையை இரத்துச் செய்ய முடியும். விண்ணப்பதாரர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலொன்று பொய்யானவை என்று ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் தெரியவருமிடத்து அவரை அரசாங்க சேவையிலிருந்து நீக்க முடியும்.

17.0 **பரீட்சை நடைமுறை**.- பரீட்சைக்கான பாடங்கள் மற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகள் கீழே காட்டப்பட்டுள்ளன :

| பாடங்கள் | அதிகபட்சப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் | நேரம் |
|---|---|---|---|
| மொழியாற்றல் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைக்கான தகைமைகாண் பரீட்சை | 100 | 40 | 2 1/2 மணித்தியாலம் |
| உளச்சார்பு | 100 | 40 | 1 மணித்தியாலம் |

எழுத்து மூலமான ஒவ்வொரு விடைப்பத்திரம் தொடர்பிலும் தெளிவற்ற கையெழுத்துக்கும் சொற்களின் எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும். பரீட்சார்த்திகள் தங்களது விருப்பத்தின் அடிப்படையில் ஒரு மொழி மூலத்தில் மாத்திரம் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சையின் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கையில் ஆகக் குறைந்தது ஐம்பது சதவீதமேனும் (50%) பெறுவது அவசியமாகும். திறமை ஒழுங்கு மற்றும் நிலவும் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை என்பவற்றின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும்.

18.0 **பாடத்திட்டம்.- மொழியாற்றல் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைக்கான தகைமைகாண் பரீட்சை (காலம் : 2 1/2 மணித்தியாலங்கள்) :**

பரீட்சார்த்திகளின் கருத்துக்களை வெளியிடுதல், கிரகித்தல், எழுத்துக்களின் பிரயோகம், மொழியும் மற்றும் கட்டுரையும், கொடுக்கப்பட்ட கடிதம் ஒன்றுக்கான பரும்படியத் தயாரித்தல், கொடுக்கப்பட்ட தரவுகளுக்கு ஏற்ப வரைபுகளையும் அட்டவணைகளையும் தயாரித்தல், கொடுக்கப்பட்ட பந்தியை சுருக்கி எழுதுதல், கொடுக்கப்பட்டுள்ள பல வாக்கியங்களின் கருத்தை தனி வாக்கியமாக எழுதுதல், எளிய இலக்கணப் பயன்பாடு தொடர்பான அறிவைப் பரீட்சிப்பதற்கான விடயம் சார்ந்த வினாக்களையும்,

அலுவலகமொன்றின் அடிப்படை ஆவணங்கள் தொடர்பில் செயற்படும் முறை பற்றி தொடர்பான அடிப்படைச் சட்டதிட்டங்கள் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஒருவர் செயற்பட வேண்டிய முறை பற்றிய அடிப்படை சட்டதிட்டங்கள் மற்றும் முகாமைத்துவ சேவை அலுவலர் செயற்பட வேண்டிய விடயங்கள் அடங்கிய ஒரு கடிதம் தொடர்பில் செயற்பட வேண்டிய முறை போன்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் பணிக் கடமைகள் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவை பரீட்சிப்பதற்கான வினாக்களையும்.

அலுவலகமொன்றில் பயன்படுத்தப்படும் தினக்குறிப்பு, வவுச்சர்கள், அசைவுப் படிவங்கள், வரவுப் பதிவேடு, தின முத்திரை, முத்திரை, பதவி முத்திரை, தபால் பொதி போன்ற உபகரணங்கள் தொடர்பிலும் அவற்றின் மூலம் கிடைக்கும் பயன்கள் தொடர்பிலும் பரீட்சார்த்திகளின் அறிவை பரீட்சிப்பதற்கான வினாக்களையும் இவ்வினாப்பத்திரம் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

பகுதி I : மொழியாற்றலை அளவிடும் விதத்தில் கிரகித்தலும் தொடர்புடைய கட்டமைப்பு வினாக்கள், சுருக்கம் எழுதுதல் மற்றும் கட்டுரை (1 மணித்தியாலமும் 15 நிமிடங்கள், 50 புள்ளிகள்)

பகுதி II : முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைக்கான பொருத்தப்பாட்டை அளவிடும் சம்பவமொன்றின். கூற்றொன்றின் அல்லது பந்தியொன்றின் அடிப்படையில் கேட்கப்படும் சுருக்க வினாக்கள், கட்டமைப்பு வினாக்கள் மற்றும் கட்டுரை வகை வினாக்கள் (1 மணித்தியாலமும் 15 நிமிடங்கள்- 50 புள்ளிகள்)

**உளச்சார்பு (காலம் 01 மணித்தியாலம்) :**

இந்த வினாப்பத்திரம் விண்ணப்பதாரிகளின் கணக்குத்திறன், தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், பொதுவான நுண்ணறிவு போன்றவற்றை அளவிடும் விதத்தில் விடயம் சார்ந்த வினாக்களைக் கொண்டிருக்கும்.

பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்க விடைகளை எதிர்பார்க்கும் 50 வினாக்கள் (காலம் : 01 மணித்தியாலம்). அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

19.0 இந்தப் பரீட்சை அறிவித்தலுக்கு இணங்க ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், இணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

20.0 இதன் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவித்தல்களில் ஏதேனும் ஒத்திசைவின்மைகள் காணப்படுமாயின், அச்சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலின் அடிப்படையில் செயற்படுதல் வேண்டும்.

எஸ். ஆலோக்கபண்டார,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2020, யூலை 03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலகப் பயன்பாட்டுக்காக மட்டும்)

**முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2019 (2020)**

LIMITED COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO GRADE III OF MANAGEMENT SERVICE OFFICERS SERVICE - 2019 (2020)

நீர் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |

(வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க நீங்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரத்தைக் குறிப்பிடவும்.)
(இதனை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

1.0 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :----.
1.2 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ----.

2.0 சேவை நிலையம் மற்றும் முகவரி :
2.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :----.
2.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
2.3 பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :-----.

3.0 3.1 பால் : பெண்-1
ஆண்-0 ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

3.4 கையடக்கத் தொலைபேசி இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐

4.0 கல்வித் தகைமைகள் :
4.1 2001.11.26 ஆந் திகதிக்கு முன்னர் ஆட்சேர்க்கப்பட்ட (நியமனம் வலுப்பெறும் திகதியை கவனத்திற்கொள்ளும் போது) அலுவலர் ஒருவரெனில் பாடசாலையில் கடைசியாக சித்தியடைந்த தரம் :-----.

4.2 க. பொ. த. (சா. த.) பரீட்சை தொடர்பான தகவல்கள் :

| | முதற் தடவை | இரண்டாம் தடவை |
|---|---|---|
| பரீட்சைக்குத் தோற்றிய வருடம் | ...................... | ............................ |
| பரீட்சை இலக்கம் | ...................... | ............................ |

| பாடம் | தரம் | பரீட்சைக்குத் தோற்றிய வருடம் |
|---|---|---|
| i. சிங்கள/தமிழ் மொழி | ................. | ............................................ |
| ii. எண் கணிதம்/வர்த்தக எண்கணிதம்/தூய கணிதம்/ அடிப்படைக் கணிதம் | ................. | ............................................ |
| iii. ........................................... | ................. | ............................................ |
| iv. ........................................... | ................. | ............................................ |
| v. ........................................... | ................. | ............................................ |
| vi. ........................................... | ................. | ............................................ |
| vii. ........................................... | ................. | ............................................ |
| viii. ........................................ | ................. | ............................................ |
| xi. ........................................... | ................. | ............................................ |
| x. ........................................... | ................. | ............................................ |

5.0 சேவை விபரம் :

5.1 நீர் தற்போது சேவை செய்யும் நிறுவனத்தின் பெயர் :-----.

5.2 அதற்குரிய அமைச்சு அல்லது திணைக்களம் :-----.

5.3 உமது தனிப்பட்ட கோவை பேணப்பட்டு வரும் அலுவலகம் மற்றும் நிறுவனத் தலைவரை தெளிவாகக் குறிப்பிடுக :----.

5.4 தற்போது வகிக்கும் பதவிப் பெயர் :----.

5.5 தற்போது வகிக்கும் பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.

5.6 தற்போது வகிக்கும் பதவி நிரந்தரமானதா அல்லது தற்காலிகமானதா :-----.

5.7 தற்போது வகிக்கும் பதவியில் சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ளதா :----.

5.8 சேவையில் நிரந்தரமாக்குவதற்குத் தகுதிபெற்ற திகதி : ----.

5.9 தற்போது வகிக்கும் பதவியில் சேவை நிரந்தரமாக்கப்பட்டு வழங்கப்பட்ட கடிதத்தின் இலக்கம் மற்றும் திகதி :-----.

5.10 தற்போது பெறும் வருடாந்த சம்பளம் (திரட்டிய) :----.

5.11 சம்பள அளவுத்திட்டம் (03/ 2016 ஆம் இலக்க 2016.02.25 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றிக்கைக்கு இணங்க) :- PL-1 - 2016/PL-2 - 2016/ PL - 3 - 2016/ MN - 01 - 2016 (தேவையற்ற சொற்களை வெட்டி விடவும்) :----.

5.12 தற்போது வகிக்கும் நியமனம் ஓய்வூதியம் உரித்துடையதா? :----.

5.13 2020.08.24 இல் தற்போதைய பதவியில் சேவைக்காலம் :----.

6. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு பற்றிய விபரம் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம்:----.

(ii) பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி :----.

(iii) செலுத்திய தொகை :----.

| |
|---|
| பற்றுச்சீட்டை, கழறாதவாறு இங்கு ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை கையில் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையலாம்.) |

என்னால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை என்று உறுதிப்படுத்துகிறேன். இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானவையென என்று அல்லது பிழையானவை என்று தெரிவு செய்யப்பட முன்னர் தெரிய வருமாயின், என்னை தகைமையற்றவராக்குவதற்கும், நியமனத்தின் பின்னர் தெரியவருமாயின் என்னை சேவையிலிருந்து நீக்குவதற்கும் முடியும் என்பதை நான் அறிவேன். மேலும், பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் நான் கட்டுப்படுவேன் என்றும் பிரகடனப்படுத்துகின்றேன்.

----
விண்ணப்பதாரியின் கையொப்பம்.
(திணைக்களத் தலைவரின் முன்னிலையில்)

திகதி :----.

**குறிப்பு** :- தனது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவருக்குப் பதிலாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தர் முன்னிலையில் விண்ணப்பதாரி கையொப்பமிடுதல் வேண்டும்.

**கையொப்பத்தை சான்றுப்படுத்துதல் :**

எனது அலுவலகத்தின் அலுவலரும் நான் தனிப்பட்ட முறையில் அறிந்தவருமான திரு./திருமதி/செல்வி .............................. என்பவர் ............................. ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் சான்றுப்படுத்துகிறேன்.

----
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

திகதி :----.
பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றுப்படுத்தல் :**

1. இந்த விண்ணப்பதாரரான திரு./திருமதி/செல்வி ............................... என்பவர் இத்திணைக்களத்தில் சேவையாற்றுகிறவர் என்றும் ;

2. அவர் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கிறார் என்றும் ;

3. அவர் நிரந்தரமான பதவியொன்றில் 2020.08.24 ஆந் திகதியாகும் போது பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளார் என்றும் ;

4. நிரந்தரப் பதவியொன்றின் பதவியில் உறுதிப்படுத்தல் கடிதமொன்று அவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் ;

5. அவர் 2020.08.24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் ஆகக் குறைந்தபட்சம் 05 வருட செயலூக்கமிக்க சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார் என்றும் ;

6. அவர் இந்த வர்த்தமானி அறிவித்தலின் 8.0 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறையினுள் அடங்கும் சம்பளம் பெறுகின்றார் அல்லது சம்பளத் திட்டத்தில் உள்ளார் என்றும் ;

7. அவர் 2020.08.24 ஆந் திகதிக்கு 01/2020 ஆம் இலக்க அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி ஒழுக்காற்று தண்டனை எதுவும் பெறவில்லை எனவும் ;

8. இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டால் அவர் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிப்பதாகவும் ;

9. பரீட்சைக் கட்டணமாக ரூபா 600.00 செலுத்திய பற்றுச்சீட்டொன்று விண்ணப்பப்படிவத்தில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் ;

10. அவருடைய விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை இத்திணைக்களத்திலுள்ள ஆவணங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்ததாகவும் இப்பரீட்சைக்கான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு இணங்க இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியுடையவர் என்றும், நான் சான்றுப்படுத்துகிறேன்.

----
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**குறிப்பு :**

(1) இத்திணைக்களத் தலைவரின் அல்லது அவர் சார்பில் கையொப்பமிடுவதற்கு உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்ட பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவர் மாத்திரம் இச்சான்றுபடுத்தலில் கையொப்பமிடுதல் வேண்டும். சான்றுபடுத்தலில் உள்ள விடயங்கள் அனைத்து விதத்திலும் சரியானவை என்று சான்றுபடுத்தும் உத்தியோகத்தர் திருப்தியடைதல் வேண்டும்.

(2) தகுதி தொடர்பான அனைத்துத் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரர்கள் இருப்பின் அவர்களுடைய விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பக்கூடாது.

7-506

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

கத்தோலிக்க மறைப் பாடசாலை

## *இறுதிச் சான்றிதழ் பரீட்சை - 2019 (2020)*

***சட்ட விதிமுறைகள் :***

*1. கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சையானது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் இதற்கென அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும்.*

*2. **பரீட்சை நிலையம்.**- நாடளாவிய ரீதியில் அனைத்து மாவட்டங்களிலும் விண்ணப்பதாரரின் எண்ணிக்கைக்கேற்ப பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும். இருப்பினும் குறிப்பிட்ட ஒரு பரீட்சை நிலையத்தில் போதியளவு விண்ணப்பதாரர்கள் இல்லாவிடின் அப்பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு, அதற்குரிய விண்ணப்பதாரர்கள் அதற்கு அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்தில் மேற்படி பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர். பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் மாவட்டங்கள் மற்றும் நகரங்களடங்கிய பட்டியல் இணைப்பு I இல் தரப்பட்டுள்ளன.*

*3. **ஊடக மொழி.**- இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளில் மாத்திரம் நடைபெறும்.*

*4. **தகுதி.**- இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் கீழ்வருவனவற்றில் ஏதேனும் ஒரு தகைமையைப் பெற்றிருக்க வேண்டும் :-*

*4.1 மறைப் பாடசாலையொன்றில் பத்தாம் தரத்தில் சித்தி பெற்று மறைப் பாடசாலையின் இறுதி சான்றிதழ் பத்திர வகுப்பில் ஒரு வருடம் கல்வி பயின்றிருத்தல் ;*

*4.2 தேசிய கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் கத்தோலிக்க மறை (கிறிஸ்தவ மறை றோ. க.) பாடத்தில் சித்தி பெற்றிருத்தல். அல்லது சிரேட்ட பாடசாலை சான்றுப்பத்திர பரீட்சையில் கத்தோலிக்க மறை (கிறிஸ்தவ மறை றோ. க.) பாடத்தில் சித்தி பெற்றிருத்தல்.*

*4.3 அந்தந்த மறை மாவட்டத்தில் நடைபெறும் வருடாந்த மறைக்கல்வி பரீட்சையில் பதினோராந்தர வகுப்பில் சித்திபெற்றிருத்தல்.*

***குறிப்பு.**- (i) இப்பரீட்சையில் தோற்றும் விண்ணப்பதாரர்கள் மேலே பந்தி 4 இல் கேட்கப்பட்டுள்ளதற்கேற்ப தகுதி பெற்றுள்ளார் என்பதை மறைக்கல்வி பாடசாலைப் பொறுப்பாசிரியர் அல்லது பங்குக் குருவானவர் உறுதிப்படுத்தல் வேண்டும்.*

*(ii) விண்ணப்பதாரர் மறைப் பாடசாலை விண்ணப்பதாரராக இருந்தால் மட்டுமே இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும்.*

5. **விண்ணப்பித்தல் :**

*5.1 கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்காக பரீட்சைத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து மறைப் பாடசாலைகளுக்கும் தேவையான விண்ணப் பப்படிவங்கள், அறிவுறுத்தல் பத்திரங்கள் உரிய காலத்தில் வழங்கப்படும். குறிப்பிட்ட காலத்திற்குள் விண்ணப்பப்படிவம் கிடைக்காவிட்டால் மறைப் பாடசாலையின் பெயர், முகவரி, விண்ணப்பதாரரின் எண்ணிக்கை ஆகிய விபரங்களை உள்ளடக்கிய கடிதம் மூலம் இவ்வறிவித்தலின் 5 : 6 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு 2020.07.31 ஆந் திகதிக்கு முன் அறிவித்து விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.*

*5.2 விண்ணப்பதாரர் தனிப்பட்ட விண்ணப்பதாரராக பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார். ஆயினும், அறிவுறுத்தல் 4 இல் கேட்கப்பட்டுள்ள தகுதியிருப்பின் தமது வதிவிடத்துக்கண்மையிலுள்ள மறைப் பாடசாலையின் ஊடாக பரீட்சைக் கட்டணமாக 200 ரூபாவைச் செலுத்தி பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கலாம். இதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் சகல மறைப் பாடசாலைகளின் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.*

*5.3 மறைப் பாடசாலைப் பொறுப்பாசிரியரினால் முன்வைக்கப்படும் இவ்விண்ணப்பங்களின் இரண்டு பிரதிகள் தயாரிக்கப்பட்டு முதல் பிரதி பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டுமென்பதுடன்*

இரண்டாம் பிரதி மறைப் பாடசாலை பொறுப்பாசிரியர் வசம் வைத்திருத்தல் வேண்டும். இவ்விண்ணப்பப்படிவம் இரண்டிலும் மறைப் பாடசாலை பொறுப்பாசிரியர் கையொப்பமிட்டிருக்க வேண்டும்.

5.4 விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2020.08.14 ஆந் திகதி ஆகும்.

5.5 விண்ணப்பங்கள் தெளிவாகவும், பிழையின்றியும் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படாத விண்ணப்பங்களும், விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு நாம் குறிப்பிட்ட கடைசித் திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

5.6 மறைப் பாடசாலையின் கணினி இலக்கத்தையும், முகவரியையும் சரியாகக் குறிப்பிடப்பட்டிருப்பதோடு முகவரி மாற்றப்பட்டிருப்பின் அதை எமக்கு அறிவிக்க வேண்டும். தொலைபேசி வசதியிருப்பின் அதன் இலக்கத்தையும் குறிப்பிடுக. நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத் தபாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது :

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு (நிறுவனம்சார் மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள்) கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த. பெ. இல. 1503,
கொழும்பு.

விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிப் பரீட்சை - (2019) 2020" என்பதையும் விண்ணப்பிக்கும் நகரத்தையும் குறிப்பிட வேண்டும். விண்ணப்பத்துடன் வேறெந்த சான்றிதழையும் இணைக்கத் தேவையில்லை.

5.7 விண்ணப்பதாரியின் உரிய சான்றிதழ் பற்றிய தகுதியை, விண்ணப்பதாரியை உறுதி செய்யும் மறைப் பாடசாலை பொறுப்பாசிரியர் அல்லது பங்குத் தந்தை அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

5.8 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் எல்லா பரீட்சார்த்திகளினதும் விண்ணப்பப்படிவத்தில் பூரணப்படுத்தியுள்ள தகவல்களை தனிப்பட்ட முறையில் பரீட்சித்துப் பார்த்து கையொப்பமிட வேண்டும்.

5.9 விண்ணப்பதாரிகள் ஒப்பமிடாத, அழிக்கும் வெண்மை பயன்படுத்திய மற்றும் வேறு குறைபாடுகளுடன் கூடிய விண்ணப்பப்பத்திரங்களும், விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

6. **பரீட்சைக் கட்டணம்**.- இப்பரீட்சைக்கான கட்டணம் 200 ரூபாவாகும். இருப்பினும், முதன் முதலில் தோற்றும் விண்ணப்பதாரர் இப்பரீட்சைக்கான கட்டணத்தைச் செலுத்த தேவையில்லை. நூன சித்தியைப் பூர்த்தி செய்ய வேண்டிய பாடத்திற்கான கட்டணம் 50 ரூபா ஆகும்.

6.1 **பரீட்சைக் கட்டணம் செலுத்துதல்.**- விண்ணப்பதாரர் அனைவரினதும் பரீட்சைக் கட்டணத்தை பொறுப்பாசிரியர் ஒன்று சேர்த்து இலங்கையில் ஏதாவதொரு தபால் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்டு, அப்பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்தின் பின்னால் ஒட்டி அனுப்ப வேண்டும். பற்றுச்சீட்டின் பிரதியொன்றை நீங்களும் வைத்திருப்பது நன்று (முத்திரை மற்றும் காசுக்கட்டளை போன்றவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

6.2 **பரீட்சைக் கட்டணத்தை மீளப்பெறல்.**- எக்காரணம் கொண்டும் இப்பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவோ, மீளச் செலுத்தப்படவோ மாட்டாது.

7. **அனுமதிப்பத்திரம்**.- பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால், விண்ணப்பித்த மறைப் பாடசாலை பொறுப்பாசிரியரூடாக அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும்.

7.1 பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் தமது அனுமதிப்பத்திரத்தில் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்தி பரீட்சைக்குத் தோற்றும் முதலாவது தடவையிலேயே பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். பரீட்சார்த்தி ஒருவர் தமது அனுமதிப்பத்திரத்தைக் கொடுக்காவிட்டால் அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தமக்கு அளிக்கப்பட்ட பரீட்சை நிலையத்தை விட்டு வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றியிருந்தால் அவரது பரீட்சார்த்தத் தகவு இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதிப்பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் மறைப் பாடசாலையின் பொறுப்பாசிரியரினால் அல்லது பங்குத் தந்தையினால் அல்லது அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபரினால் அல்லது அரசின் நிரந்தர சேவையில் நிறைவேற்றுத்தரத்திலுள்ள அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு 07 நாட்களுக்கு முன் அனுமதிப் பத்திரம் கிடைக்காவிடின் அந்த மறைப்பாடசாலை பொறுப்பாசிரியரினூடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் கீழ்க் குறிப்பிட்ட விபரங்களை அறிவிக்க வேண்டும் :-

(1) பரீட்சையின் பெயர் ;
(2) மறைப் பாடசாலையின் பெயர் ;
(3) மறைப் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ள கணினி இலக்கம் ;
(4) விண்ணப்பதாரியின் முழுப் பெயரும் முகவரியும் ;
(5) விண்ணப்பித்த பரீட்சை நிலையம்/நகரம் ;
(6) விண்ணப்பப்பத்திரம் அஞ்சலிடப்பட்ட அஞ்சலகம் ;
(7) விண்ணப்பம் பதிவு செய்யப்பட்ட பதிவு இலக்கமும் திகதியும் ;
(8) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிருப்பின் அந்தப் பற்றுச்சீட்டு இலக்கம், திகதி, தபால் அலுவலகம்.

8. **ஆள் அடையாளம்.**- ஒவ்வொரு வினாத்தாளுக்கும் தோற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மண்டப மேற்பார்வையாளர் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் பரீட்சார்த்திகள் தம்மை அடையாளப்படுத்தும் ஆவணத்தைச் சமர்ப்பிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றில் ஒன்றைப் பயன்படுத்தலாம் :-

8.1 தேசிய ஆள் அடையாள அட்டை ;
8.2 செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
8.3 செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் ;
8.4 தபால் அடையாள அட்டை.

9. **சித்தி பெற்றமையைத் தீர்மானித்தலும், பெறுபேற்றை வெளியிடலும்.**- இத்தேர்வுக்கான வினாத்தாள்களின் எண்ணிக்கை நான்கு ஆகும். பரீட்சையில் சித்திபெறுவதற்கு பரீட்சார்த்தி நான்கு வினாத்தாள்களிலும் சித்திபெற வேண்டும். ஆயினும் இந்நான்கினுள் ஏதேனும் ஒரு பாடத்தில் மாத்திரம் சித்திபெறாவிடின் அது நூன சித்தியாகக் கருதப்படும். பரீட்சைக்குத் தோற்றிய வருடத்திலிருந்து தொடர்ந்து வரும் இரண்டு (02) வருடங்களுக்குள் அந்நூன சித்தி பெற்ற பாடத்திற்கு மீண்டும் தோற்றி அதில் சித்தி பெற வேண்டும். நூன சித்தி பெறும் மாணவர்கள் அதனைப் பூர்த்தி செய்யும்போது அப்பாடத்திற்கு மட்டுமே தோற்ற வேண்டும்.

9.1 எல்லாப் பாடங்களின் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 100 புள்ளிகள் வழங்கப்படுவதுடன் சித்தி பெறும் தரங்களுக்குரிய புள்ளி இடைவெளி மற்றும் குறியீடு என்பன கீழே தரப்பட்டுள்ளன :

| புள்ளி ஆயிடை | தரம் | குறியீடு |
|---|---|---|
| 0-34 | சித்தியின்மை | F |
| 35-54 | சித்தி | S |
| 55-69 | திறமைச் சித்தி | C |
| 70-100 | விசேட சித்தி | D |

9.2 பரீட்சார்த்திகளின் பெறுபேற்று அட்டவணை அந்தந்த மறைப் பாடசாலைப் பொறுப்பாளருக்கு தபால் மூலம் அனுப்பப்படும்.

10. **சான்றிதழ் பத்திரம்.**- இத்தேர்வில் சித்தி பெற்ற அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைத் திணைக்களத்தினால் சான்றிதழ் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

11. **விடைத்தாள் மீள் பரிசீலனை.**- மறைப் பாடசாலை பொறுப்பாசிரியரின் வேண்டுகோளின்படி மாத்திரம் விடைத்தாள்கள் பரிசீலனை செய்யப்படும். இத்திணைக்களத்தினால் வெளியிடப்படும் படிவத்தில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டு 30 நாட்களுக்குள் மீள் பரிசீலனைக்கு விண்ணப்பிக்கலாம். இதற்காக அறவிடப்படும் கட்டணத் தொகை பற்றி அவ்வப்போது மாற்றம்

செய்ய இடமுண்டு. அதுபற்றி விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்படும். ஏற்கனவே வெளியிடப்பட்ட பெறுபேற்றில் ஏதும் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே இப்பணம் மீளத்தரப்படும். எக்காரணத்தைக் கொண்டும் விண்ணப்பதாரருக்கோ அவரது பிரதிநிதிக்கோ விடைத்தாள்களைப் பரிசீலிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

12. இச்சட்டதிட்டங்களுக்கும், பாடத்திட்டத்தில் காட்டப்பட்டுள்ள ஒழுங்கு முறைகளுக்கும் ஏற்ப செயற்படுவதற்கு அனைத்து விண்ணப்பதாரரும் கட்டுப்பட்டு இருப்பதோடு இந்த ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடிக்காதோர் பற்றிய விடயத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் முடிவே இறுதியானதும் ஆகும்.

பீ. சனத் பூஜித,
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
*2020, யூலை 02.*

**கத்தோலிக்க மறை**

(2007 இல் இருந்து நடாத்தப்படும் பரீட்சைக்கான) பாடத்திட்டம்

*இத்தேர்வு ஒவ்வொரு வினாத்தாளுக்கும் மூன்று (03) மணித்தியாலங்களைக் கொண்ட 04 வினாத்தாள்களை உள்ளடக்கியது.*

***வினாத்தாள் I***

கத்தோலிக்க விசுவாசம்

(அ) இவ்வினாத்தாள் திருத்தூதரது விசுவாச அறிக்கையின் ஆரம்ப கற்பித்தலை அடித்தளமாகக் கொண்டுள்ளது :

* **படைத்தவர்**
- உலக ஆரம்பம்
- படைப்பின் அழகு
- படைப்பைப் பாதுகாத்தல் (தொ. நூ. 1, 2, 3)

* **மீட்பர்**
- இயேசுக்கிறிஸ்து (யோவான் 1 : 1-14)
- இறையரசு பற்றிய படிப்பினை (மத்தேயு 5, 6, 7)
- உவமைகள் (மத்தேயு 13 : 1-52)
- புதுமைகள் (யோவான் 11 : 38-45, லூக்கா 8 : 26-39, மாற்கு 2 : 1-12 மற்றும் 4 : 35-41)

* **தூய ஆவியானவர்**
- செயற்பாடுகள் (யோவான் 7 : 37-39, 14 : 15-31, 16 : 5-15, 1 கொருந்தியர் 12 : 4-11)

* **கத்தோலிக்க திருச்சபை**
- ஏகம், பரிசுத்தம், கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம்
- திருச்சபை கிறிஸ்துவின் சரீரமாக
  - ⇨ உரோமையர் 12 : 4-21
  - ⇨ 1 கொரிந்தியர் 12 : 12-31
- திருச்சபையின் ஆட்சித்திட்டம்
- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரம்கொண்ட பணி
- துறவற பணி
- பொதுநிலையினர் பணி

* **மனித வாழ்வின் மாற்றம்**
- மனிதனின் இறுதி நிகழ்வு
- புதிய வானமும் புதிய பூமியும் (திருவெளிப்பாடு 21 : 1-4)

### *வினாத்தாள் II*

### கத்தோலிக்க வாழ்வுக்கான வழி

(ஆ) **கத்தோலிக்க வாழ்வுக்கு வலிமை தரும் திருவழிபாடு**

* திருப்பலியும் திருப்பலிச் சடங்கும்
* பாஸ்கா மறைபொருள்
* இறையருள்
* திருவருட்சாதனங்கள் (பொதுவான பண்பு)

- ● தொடக்க திருவருட் சாதனங்கள் :
  - ⇨ திருமுழுக்கு
  - ⇨ உறுதிப்பூசுதல்
  - ⇨ திவ்விய நற்கருணை

- ● சுகத்தை வழங்கும் திருவருட்சாதனங்கள் :
  - ⇨ ஒப்புரவு
  - ⇨ நோயிற்பூசுதல்

- ● பணிக்காக ஏற்படுத்தப்பட்ட திருவருட் சாதனங்கள் :
  - ⇨ குருத்துவம்
  - ⇨ மெய்விவாகம்

### *வினாத்தாள் III*

### கத்தோலிக்க நல்லொழுக்க வாழ்வு

(இ) **கத்தோலிக்க நல்லொழுக்கம்**

* பத்துக் கட்டளைகளும் அன்பின் கட்டளைகளும் இரு பக்கங்கள்
* பத்துக் கட்டளைகளை நிறைவாக்கிய இயேசுக்கிறிஸ்து (மத்தேயு 5 : 21-47)
* சமவெளிப் பொழிவு (மலைப்பொழிவு) (லூக்கா 6 : 17-49)
* அறிவு, சுதந்திரமான விருப்பு, உணர்வுகள்
* இறை உறவின் பண்புகள்
* மனச்சாட்சி
* இறைவனை அன்பு செய்தல் (1-3 கட்டளைகள்)
* அயலவரை அன்பு செய்தல் (4-10 கட்டளைகள்)
* பத்துக் கட்டளைகளில் தோன்றவேண்டிய நற்பழக்கங்கள்
* கத்தோலிக்க தனித்துவ அடையாளம்

*வினாத்தாள் IV*

**செப வாழ்வு**

(ஈ) **இறையுறவை வளர்க்கும் செபம்**

* பழைய ஏற்பாட்டில் செபம்
    - ஆபிரகாம்
    - மோசே

* புதிய ஏற்பாட்டில் செபம்
    - கிறிஸ்து செபித்த விசேட சந்தர்ப்பங்கள்
    - செபம் தொடர்பான விசேட படிப்பினைகள் (லூக்கா 11 : 1-13)

* திருச்சபை வாழ்வில் செபம்
    - புகழ்தல்
    - நன்றி கூறல்
    - வேண்டுதல்
    - பரிந்துரை செபங்கள்
    - தியானத்தின் மூலம் செபித்தல்

* கிறிஸ்து கற்பித்த செபத்தில் (பரலோக மந்திரம்) வேண்டுதல்கள் ஏழு
    - உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக
    - உம்முடைய அரசு வருக
    - உமது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூவுலகிலும் செய்யப்படுவதாக
    - எங்கள் அனுதின உணவை எங்களுக்கு அன்றாடம் அளித்தருளும்
    - எங்களுக்குத் தீமை செய்கின்றவர்களை நாங்கள் பொறுப்பதுபோல் எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்
    - சோதனையில் எங்களை விழ விடாதேயும்
    - தீமையில் இருந்து எங்களை இரட்சித்தருளும்

* பல்வித பக்தி முயற்சிகள்
    - செபமாலை
    - நவநாட்கள்
    - திருமணித்தியாலம்

**பயன்படுத்தக்கூடிய நூல்கள்**

- புதிய கத்தோலிக்க திருமறை
- பெரிய குறிப்பிடம்
- திருவிவிலியம் (குறிப்பிட்ட பகுதிகள்)
- இரண்டாம் வத்திக்கான் சங்க,
    - ⇨ திருவழிபாடு
    - ⇨ இன்றைய உலகில் திருச்சபை
    - ⇨ கிறிஸ்துவின் திருச்சபை
    - ⇨ பொதுநிலையினரின் திருப்பணி

அட்டவணை - 1

அந்தந்த மாவட்டங்களின் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள நகரங்களும் நகர எண்களும்

**மாவட்டம் 01 - கொழும்பு**

| நகரம் | நகர எண் |
|---|---|
| பொரளை | 101 |
| களுஅக்கலை | 102 |
| பன்னிப்பிட்டி | 103 |
| மொறட்டுவை | 104 |

**மாவட்டம் 02 - கம்பஹா**

| நகரம் | நகர எண் |
|---|---|
| நீர்கொழும்பு | 205 |
| கந்தானை | 206 |
| கம்பஹா | 207 |
| றாகம | 208 |

**மாவட்டம் 03 - களுத்துறை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| களுத்துறை | 309 |

**மாவட்டம் 04 - காலி**

| நகரம் | நகர எண் |
|---|---|
| காலி | 410 |

**மாவட்டம் 05 - மாத்தறை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மாத்தறை | 511 |

**மாவட்டம் 06 - அம்பாந்தோட்டை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| அம்பாந்தோட்டை | 612 |

**மாவட்டம் 07 - இரத்தினபுரி**

| நகரம் | நகர எண் |
|---|---|
| இரத்தினபுரி | 713 |

**மாவட்டம் 08 - கேகாலை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| கேகாலை | 814 |

**மாவட்டம் 09 - புத்தளம்**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| புத்தளம் | 915 |
| சிலாபம் | 916 |
| வென்னப்புவ | 917 |

**மாவட்டம் 10 - குருநாகல்**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| குருநாகல் | 1018 |
| குளியாப்பிட்டி | 1019 |
| நிக்கவரட்டி | 1020 |

**மாவட்டம் 11 - கண்டி**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| கண்டி | 1121 |

**மாவட்டம் 12 - மாத்தளை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| மாத்தளை | 1222 |

**மாவட்டம் 13 - நுவரெலியா**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| தலவாக்கலை | 1323 |

**மாவட்டம் 14 - பதுளை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| பதுளை | 1424 |

**மாவட்டம் 15 - மொணறாகலை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| மொணறாகலை | 1525 |

**மாவட்டம் 16 - அநுராதபுரம்**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| அநுராதபுரம் | 1626 |

**மாவட்டம் 17 - பொலநறுவை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| ஹிங்குராக்கொடை | 1727 |

**மாவட்டம் 18 - திருகோணமலை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| திருகோணமலை | 1828 |

**மாவட்டம் 19 - மட்டக்களப்பு**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| மட்டக்களப்பு | 1929 |

**மாவட்டம் 20 - அம்பாறை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| அம்பாறை | 2030 |
| கல்முனை | 2031 |

**மாவட்டம் 21 - யாழ்ப்பாணம்**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| யாழ்ப்பாணம் | 2132 |
| மானிப்பாய் | 2133 |
| பருத்தித்துறை | 2134 |
| நெடுந்தீவு | 2135 |

**மாவட்டம் 22 - முல்லைத்தீவு**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| கிளிநொச்சி | 2236 |
| முல்லைத்தீவு | 2237 |
| முழங்காவில் | 2238 |

**மாவட்டம் 23 - மன்னார்**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| மன்னார் | 2339 |
| முருங்கன் | 2340 |
| ஆண்டாங்குளம் | 2341 |
| பெரிய பண்டிவிரிச்சான் | 2342 |

**மாவட்டம் 24 - வவுனியா**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| வவுனியா | 2443 |

7-596

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.